பக்கங்கள்: 10

# காலைக்கதிர்

Kalaikkathir

விழியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 17 சனிக்கிழமை 07.06.2025 கதிர் 210

## இனி இது ரகசியம் அல்ல!

வடக்கில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியும் தமிழ் காங்கிரஸும் இணைந்து கூட்டாக யாழ்ப்பாணத்தில் 10 சபைகளிலும், வன்னியில் 4 ☞ 2

## தமிழ் மக்களின் உரிமைக்காக இறுதிவரை அகிம்சை வழியில் பயணித்தவர் மாவை

### கயந்த கருணாதிலக புகழுரை

தமிழ் இளைஞர்கள் தமது உரிமைகளைக் கோரி ஆயுத வழியில் பயணித்தபோதும் தமிழ் மக்களின் உரிமைக்காக இறுதிவரை அஹிம்சை வழியில் பயணித்து கனவான் அரசியல் செய்த பெரும் தலைவர் மாவை சேனாதிராசா என எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான கயந்த கருணாதிலக்க புகழாரம் சூட்டினார். ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளின் அரசியல் கட்சித் தலைவர்கள் , உறுப்பினர்கள் அமரர் மாவை சேனாதிராசாவின் இழப்புக்கு அனுதாபம் தெரிவித்தனர்.

அரசியல் கட்சித் தலைவர்களான கஜேந்திரகுமார், ரிசாட் பதியூதீன். ரவூப் ஹக்கீம், சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க உட்பட ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்களும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் உறுப்பினர்களான சாணக்கியன், குகதாசன், ஸ்ரீ நேசன் ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணி உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் அனுதாபம் தெரிவித்தனர்.

எதிர்கட்சிகளின் பிரதம கொறடாவான கயந்த கருணாதிலக தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மக்களுக்காக தன்னை இறுதிவரை அர்ப்பணித்தவர் மாவை சேனாதிராசா. அவர் பிறந்தது முதல் இறக்கும் வரை தனது சொந்த மண்ணிலேயே இருந்தார். அரசியல் செய்தார். தமிழ் அரசியல் தலைவர்கள் சிலர் கொழும்பில் வாழ்ந்த போதும் மாவை சேனாதிராசா தனது சொந்த மண்ணில்தான் வாழ்ந்தார். தனது ☞ 6

## பிறந்த சிசுவை விற்க முயன்ற தாயாருக்கு 7 வருட கடூழிய சிறை

பிறந்து 2 நாட்களேயான குழந்தையை 75 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்ய முயன்ற வழக்கில் குழந்தையின் தாயாருக்கு 7 வருடங்கள் கடூழிய சிறைத்தண்டனை விதித்து கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. ☞ 6

## பத்தே நாள்களில் குற்றவாளிக்கு பொதுமன்னிப்பு வழங்கிய அநுர

### இது பாரதூரமானது என்கிறார் களுத்துறை எம்.பி.

அநுராதபுரம் மேல்நீதிமன்றத்தால் 2025.05.02 சிறை தண்டனை விதிக்கப்பட்ட நபருக்கு 2025.05.12 ஆம் திகதியன்று ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க பொதுமன்னிப்பு ☞ 6

## பிரபாகரனின் ஆயுதங்களா? அதுவொரு பச்சைப் பொய்

### பதறும் பாதுகாப்புச் செயலர்

கொழும்பு துறைமுகத்திலிருந்து எவ்வித சோதனைகளுமின்றி விடுவிக்கப்பட்ட கொள்கலன்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் ஆயுதங்களே காணப்பட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் அருச்சுனா தெரிவித்தமையை பாதுகாப்பு செயலாளர் ஓய்வு பெற்ற எயா வைஸ் மார்ஷல் சம்பத் துய்யகொந்தா முற்றாக மறுத்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் அருச்சுனா தெரிவித்துள்ள விடயம் முற்றிலும் ஆதாரமற்றதும் பொய்யானதுமாகும். அத்தகைய குற்றச்சாட்டுகளை நிரூபிப்பதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய பாதுகாப்புடன் தொடர்புடைய விடயங்களை இவ்வாறு அரசியலாக்கவோ அல்லது தவறாக சித்தரிக்கவோ கூடாது என்று பாதுகாப்பு செயலாளர் வலியுறுத்தியுள்ளார்.

துறைமுகத்தில் ஏற்பட்ட நெறிசல் காரணமாக 323 கொள்கலன்கள் எவ்வித சோதனைகளும் இன்றி விடுவிக்கப்பட்டன. குறித்த கொள்கலன்கள் சிவப்பு ☞ 6

# சிந்துப்பாத்தி புதைகுழி இரகசியமாக மனித உடல்கள் புதைக்கப்பட்ட இடம்

## சந்தேகம் வெளியிட்டனர் அகழ்வுப் பணியில் ஈடுபடும் அதிகாரிகள்

செம்மணி சிந்துப்பாத்தி மயானத்தில் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழி, சந்தேகத்திற்குரிய வகையில் அல்லது இரகசியமாக மனித உடல்களைப் புதைப்பதற்குரிய இடமாக இருந்திருக்கலாம் என்று இங்கு அகழ்வுப்பணியில் ஈடுபட்டுள்ள தொல்லியல் தடயவியல் துறைப் பேராசிரியர் ராஜ்சோமதேவா மற்றும் யாழ். போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி பிரணவன் ஆகியோர் தமது முதற்கட்ட அவதானிப்பு அறிக்கையை நீதிமன்றத்தில் வங்கியுள்ளனர்.

இந்தப் புதைகுழியில் என்புக் கூடுகள் ஒழுங்கற்ற வகையில், குவியல்களாக, குழப்பமான சூழலில் புதைக்கப்பட்டுள்ளன. அவற்றுக்குரிய ஆடைகளோ அல்லது தனிப்பட்ட அணிகலன்களோ புதைகுழிப் ☞ 2

## ஆளும் – எதிர்க் கட்சி எம்.பிக்கள் மத்தியில் நாடாளுமன்றில் நேற்று கடும் வாக்குவாதம்

நாடாளுமன்ற நடவடிக்கைகளை சர்வாதிகார போக்கில் நடத்த முயற்படக்கூடாதென எதிர்க்கட்சி உறுப்பினர் சமிந்த விஜேசிறி சபாநாயகர் மற்றும் அமைச்சர் பிமல் ரத்நாக்கவை பார்த்து தெரிவித்ததையடுத்து சபையில் ஆளும், எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கிடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. நிலையியற் கட்டளையில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்களை புரிந்துகொள்ள முடியாவிட்டால் வீட்டில் இருந்து நன்கு படித்துவிட்டு வருமாறும் சபாநாயகர் சமிந்த விஜேசிறி எம்.பியை பார்த்து தெரிவித்தார்.

நாடாளுமன்றம் நேற்று வெள்ளிக்கிழமை சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன தலைமையில் கூடியது. பிரதான நடவடிக்கைகளைத் தொடர்ந்து வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில், எதிர்க்கட்சி உறுப்பினர் ஹேஷா விதானகே எம்.பி தனக்குறிய ☞ 2

## இடைநிறுத்தப்படாமல் முழுமையாக தோண்டப்படவேண்டும் செம்மணி

### சுமந்திரன் ஆளும்தரப்பிடம் வலியுறுத்து

செம்மணி சிந்துப்பாத்தியில் தற்போது தோண்டப்பட்டுவரும் புதைகுழி தொடர்பான பணிகள் இடைநிறுத்தப்படாமல் முழுமையாக இடம்பெறவேண்டும். பணம் இல்லை, வசதிகள் இல்லை என்று கூறாமல் இதுற்குரிய முழு ஒத்துழைப்பையும் ஆளும்தரப்பு வழங்கவேண்டும் என்று தமிழ் அரசுக் கட்சியின் செயலாளர் சுமந்திரன் வலியுறுத்தினார். ☞ 2

## சாராய கம்பனிகளிடம் பணம் பெறும் அதிகாரிகள் விவரம் வெளிவிடுவேன்

### அமைச்சர் சுனில் ஹந்துனெத்தி அறிவிப்பு

சாராய கம்பனிகளிடமிருந்து பணம் பெற்றுக்கொள்ளும் ஓரிரு நபர்கள் நிதி அமைச்சில் இருக்கின்றனர். அவர்களின் பெயர் விவரங்களை ஒரு சில தினங்களில் வெளிப்படுத்துவேனென கைத்தொழில் அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில், நளின் பண்டார மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ☞ 6

## உப்பு விலையை அதிகரித்து விற்றால் தடுக்க நடவடிக்கை

### வர்த்தக அமைச்சர் அறிவிப்பு

நுகர்வோரைப் பாதிக்கும் வகையில் இறக்குமதி செய்யப்படும் உப்பை விலை அதிகரித்து விற்பனை செய்ய முயற்பட்டால் அதனை தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்போம் என்று வர்த்தகம், உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில், ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் ஹேஷா விதானகே எம்.பியினால் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து ☞ 6

## ஊழல் எதிர்ப்புக் குழு ஆவணங்கள் பிரதமர் அலுவலகத்தில் இல்லை

### ரணில் எடுத்துச் சென்றுவிட்டார் என்று பிரதமர் குற்றச்சாட்டு

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மற்றும் அமைச்சர் ஆனந்த விஜேபால ஆகியோர் 2015 ஆம் ஆண்டு ஊழல் எதிர்ப்புக் குழுவில் அங்கம் வகித்தது ஒன்றும் புதிதல்ல, இரகசியமல்ல. ஜனாதிபதி பலமுறை இதனை பகிரங்கமாக குறிப்பிட்டுள்ளார். இந்த குழுவின் ஒருசில ஆவணங்கள் பிரதமர் அலுவலகத்தில் இல்லை. முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அந்த ஆவணங்களை ☞ 6

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

சபைகளிலும்ஆட்சியைப்பிடிக்கமுடியும்என்று தனது நம்பிக்கையை வெளிப்படுத்தியுள்ளார் தமிழ் காங்கிரஸ் தலைவர் கஜேந்திரகுமார்.

நேற்றுவெள்ளிக்கிழமைகொழும்பிலுள்ள கஜேந்திரகுமாரின் இல்லத்தில் அவரும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனும் செய்தியாளர்களைச் சந்தித்தனர். அதில் இந்தக் கருத்தை அவர் தெரிவித்தார்.

இந்தச்செய்தியாளர்சந்திப்பில்கூட்டணியாக இணைந்து வடக்கு, கிழக்கு மாகாணங்களில் எத்தனை உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சியமைக்க முடியும் என எதிர்பார்க்கிறீர்கள் என வினவியபோதே கஜேந்திரகுமார் இதனைத் தெரிவித்தார். அதன்படி யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்திலுள்ள 17 உள்ளூராட்சி மன்றங்களில் 10 சபைகளில் தம்மால் ஆட்சியமைக்க முடியும் எனவும், வன்னி தேர்தல் மாவட்டத்தில் அநேகமாக 4 சபைகளில் ஆட்சியமைக்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அதேபோன்று தமிழ் அரசுக் கட்சி முன்னிலை வகிக்கும் சபைகளில் அவர்கள் ஆட்சியமைப்பதற்கான ஒத்துழைப்பை வழங்குவதற்குத் தாம் தயாராக இருக்கின்றார் என்றும், ஆகவே இந்த விடயத்தில் தமிழ் அரசுக் கட்சி சிந்தித்துச் செயற்பட வேண்டும் எனவும் கஜேந்திரகுமார் வலியுறுத்தினார்.

அதாவதுசபைகளில்முன்னிலைவகிக்கும் கட்சிக்கு ஆதரவு வழங்குவது என்ற தமிழ்த் தேசியப் பேரவையின் முடிவிலிருந்து அவர் பின்வாங்கி, சபைகளில் அணிகளாகச் சேர்பவர்களில் யாருக்கு அதிக எண்ணிக்கை ஆசனங்கள் இருக்கின்றதோ அவர்களே சபைகளில்ஆட்சியமைப்பதுஎன்கிறமுடிவுக்கு இப்போது அவர் வந்திருக்கிறார் என்பதையே அவர் தெளிவுபடுத்தியிருக்கின்றார். நாளுக்கொரு அரசியல் நிலைப்பாடு எடுக்கிறார். அதனால் பாதகமில்லை. அரசியல்வாதிகள் என்றாலோ, பொய் புரட்டு பித்தலாட்டம் நாளுக்கொரு அறிக்கை என்பதுதானே வழக்கம் அதனால் அதைக் கூடச் சகித்துக்கொள்ளலாம்.

ஆனால், சபைகளில் ஆட்சியைப் பிடிப்பதற்குத்தான் தாங்கள் கூட்டு வைத்துக்கொண்டோம் என்பதை வெளிப்படையாகச்சொல்வதற்குத்திராணியற்ற ஒருவரை, அதை மறைக்க தங்களுக்கு இடையில் கொள்கைக் கூட்டு என்று மக்களை ஏமாற்றும் ஒருவரை அரசியல்வாதியாகவோ அரசியல் தலைவராகவோ எப்படி ஏற்றுக்கொள்ள முடியும் என்பதுதான் இங்குள்ள மிகப் பெரும் கேள்வி.

தமிழ் அரசுக் கட்சிக்கு எதிராக சபைகளில் ஆட்சியைப் பிடிப்பதற்காக நாங்கள் ஒன்று சேர்ந்துள்ளோம் என்று ஏன் இந்த இரு தரப்பினராலும் நேரடியாகச் சொல்ல முடியவில்லை? அப்படிச்சொல்வதில்ஒருதப்பும் இல்லையே, அதற்காகத்தானே அவர்கள் தனித் தனியே கட்சிகளை வைத்து நடத்துகிறார்கள். தங்களுக்குத் தனித் தனிக் கொள்கைகள் இருக்கின்றன என்றுவேறு சொல்கிறார்கள். எனவே தமிழ் அரசுக் கட்சியை வீழ்த்தி அவர்கள் ஆட்சியைப் பிடிக்க முற்படுவதை மக்கள் ஒருபோதும் தவறாக நினைக்கப் போவதில்லை. ஆனால், தமிழ் அரசுக் கட்சிக்குத்தான் மக்களிடம் ஆதரவு அதிகம் என்பதால், அதைக் கவிழ்ப்பதற்கு தாங்கள் எடுக்கும் முயற்சி மக்களிடம் தமக்கிருக்கும் செல்வாக்கை மேலும் சரித்துவிடுமோ என்கிற அச்சம் காரணமாகவே உள்ளூராட்சி சபைகளைக் கைப்பற்றுவதற்கான தமது கூட்டைக் கொள்கைக் கூட்டு, கேட்பாட்டுக் கூட்டு என்று கூறி மக்களை ஏமாற்றுகிறார்கள். இருந்தாலும் அவர்களை மீறி உண்மை அவர்களிடமிருந்தேஅவ்வப்போதுவெளிப்பட்டு வி-டுகின்றது.

இன்னொரு கொசுறு அவதானிப்பு, டக்ளஸுடன் சங்கு - சைக்கிள் கூட்டணி பேச முற்பட்ட விடயத்தை மறுக்கும் கஜேந்திரகுமார், செல்வத்தாரை அருகில் வைத்துக்கொண்டு செய்தியாளர் சந்திப்பு நடத்துகின்றார். ஆனால் அதில் நேரடியாகச் சம்பந்தப்பட்டவர்கள் என்று கூறப்படும் சித்தார்த்தனையும் சுரேஸ் பிரேமச்சந்திரனையும்கொண்டுஏன்இன்னமும் மறுப்பு அறிக்கை வெளியிடவில்லை, அல்லது அவர்களை பக்கத்தில் வைத்துக்கொண்டு ஏன் செய்தியாளர்களைச் சந்திக்கவில்லை. அவை எல்லாம் போகட்டும், சந்திப்பதற்குத் தன்னிடம் நேரம் கேட்டார்கள், பின்னர் அதை ஒத்தி வைத்தார்கள் என்று டக்ளஸ் தேவானந்தா பகிரங்கமாக ஊடகங்களில் தெரிவித்த பின்னரும் டக்ளஸின் கருத்தை மறுத்து ஏன் எதுவும் பேசுவதில்லை. அந்தச் செய்தியை வெளியிட்ட ஊடகத்தின் மீதான் கஜேந்திரகுமார் பாய்கிறாரே தவிர, செய்திக்கு மூல காரணமானவர்கள் மீது எதுவம் சொல்ல மாட்டேன் என்கிறார் அந்த 'நேர்மை அரசியல்வாதி'. வாழ்க அவரது நேர்மை.

..............................

நாடாளுமன்றத்தில்நேற்றுஉரையாற்றிய தமிழ் அரசுக் கட்சி உறுப்பினர் சிறீதரன், தனது கட்சியின் முன்னாள் தலைவர் மாவை சேனாதிராசாவைக் கொல்ல முற்பட்டவர் டக்ளஸ் தேவானந்தாவே என்று குற்றஞ்சாட்டியிருந்தார். அதில் ஒன்றும் தவறில்லை. அது உலகறிந்த விடயம். தேர்தல் பரப்புரைக்காகச் சென்றபோது மாவையரும் மற்றவர்களும் ஈபிடிபியனரால் தீவகத்தில் வைத்து தாக்கப்பட்டார்கள் என்பதும், அது தொடர்பில் கொலை முயற்சிக் குற்றச்சாட்டில் தேடப்பட்ட ஈபிடிபியின் முக்கிய நபர்கள் பின்னர் வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்றனர் என்பது நாடறிந்த செய்திகள். அதனால் சிறீதரன் சொன்னதில் எதுவும் தவறில்லை.

அதேநேரம், தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் சிவஞானம், ஈபிடிபியை சந்தித்து உள்ளூராட்சி சபைகளில் தமக்கு ஆதரவு தரும்படி கேட்ட பின்னணியில் சிறீதரனின் இந்த உரை பின்புல அர்த்தம் நிறைந்தது என்பதை எமது வாசகர்கள் தெளிவாகப் புரிந்துகொள்வார்கள். இப்படி தனது கட்சியின் முன்னாள் தலைவரைக் கொல்வதற்கு முயன்றார் என்று குற்றஞ்சாட்டப்படும் ஒருவருடன் சேர்வதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் சிறீதரன், கட்சியின் இப்போதைய தலைவரைக் கொலை செய்வதற்கு முயன்றார்கள் என்று குற்றஞ்சாட்டப்படும் இரு கட்சிகளுடன் இணைந்து செயற்பட்டிருக்கின்றார். தான் கட்சித் தலைவராக வந்தால் அவர்களுடன் மீண்டும் இணைந்து செயற்படுவேன் என்றும் அறிக்கை விட்டுள்ளார்.

ஆம், தமிழ் அரசுக் கட்சியின் இன்றைய தலைவர் சிவஞானத்தைக் கொல்வதற்கு இரண்டு தடவைகள் முயற்சிகள் நடந்துள்ளன. முதலாவது தடவை நடந்த கொலைமுயற்சியை ரெலோ இயக்கத்தைச் சேர்ந்த ஒருவரே மேற்கொண்டார் என்பதையும் இரண்டாவது தடவை மேற்கொள்ளப்பட்ட முயற்சியை புளொட் இயக்கத்தைச் சேர்ந்த ஒருவரே மேற்கொண்டார் என்பதையும் தலைவர் சிவஞானம் இன்றும் தெளிவாக எடுத்துரைப்பார் என்றே நம்புகின்றேன். அவர் இப்போதைக்கு வாயை மூடிக்கொண்டிருந்தாலும் உண்மை உறங்கிவிடாது. இவ்வாறு கட்சியின் இன்றைய தலைவரைக் கொல்ல முயன்ற கட்சிகளுடன் கடந்த காலங்களில் எந்தவித விசனமும் இன்றிச் செயற்பட முடிந்தாலும் முன்னாள் தலைவரைக் கொல்ல முயன்றவர்களிடம் ஆதரவு கேட்பது மட்டுமே தவறு என்று சிறீதரன் சொல்ல வருகின்றாரா?

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## சிந்துப்பாத்தி....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியில் காணப்படவில்லை. எனவே இது சந்தேகத்துக்குரிய அல்லது இரகசியமாக மனித உடலங்களைப் புதைப்பதற்குரிய இடமாக இருந்திருக்கலாம் என்று அவர்கள் தமது அவதானிப்பில் தெரிவித்திருக்கின்றனர்.

நிலமட்டத்திலிருந்து 1.6 அடியிலேயே எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதால், இந்தப் பகுதியில் மேலும் அகழ்வுப் பணிகளை முன்னெடுக்க வேண்டியிருக்கின்றது என்றும் அதற்கு 45 நாள்கள் தரப்படவேண்டும் என்றும் அவர்கள் நீதிமன்றத்தில் முன்வைத்த கோரிக்கையின் அடிப்படையில் சிந்துப்பாத்தி புதைகுழியை மேலும் 45 நாட்களுக்குத் தோண்டுவதற்கான கட்டளையைப் பிறப்பித்த நீதிவான், அதற்கான செலவு மதிப்பீட்டு அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும்படியும் உத்தரவிட்டார்.

செம்மணியில் பெரும் மனிதப் புதைகுழி இருப்பதாக 1999இல் அறியப்பட்டதைத் தொடர்ந்து அங்கு நீண்ட நாள்களாக அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மாணவி கிருஷாந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்ற சோமரத்ன ராஜபக்ச என்ற படைச் சிப்பாய் வெளிப்படுத்திய உண்மையின் அடிப்படையில் செம்மணிப் புதைகுழி தோண்டப்பட்டது. அதில் பல சடலங்கள் மீட்கப்பட்டன. செம்மணிப் புதைகுழியில் பல நூற்றுக்கணக்கானவர்களின் சடலங்கள் புதைக்கப்பட்டன என்று தனது வாக்குமூலத்தில் சேமரத்ன ராஜபக்ச தெரிவித்திருந்தார். இதையடுத்து செம்மணிப் புதைகுழி என்று உலகப்புகழ் பெற்ற இந்த விவகாரம், பின்னர் கிடப்பில் போடப்பட்டது.

தற்போது செம்மணிப் பகுதியில் அமைந்துள்ள சிந்துப்பாத்தி மயானத்தில் அபிவிருத்திப் பணிகளின்போது மனித எலும்பு எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அங்கு நீதிமன்ற உத்தரவின் பேரில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

புதியபுதைகுழியிலிருந்து 17 மனிதர்களின் எலும்பு எச்சங்கள் முழுமையாகவும் பகுதியளவாகவும் இதுவரையில் அடையாளம் காணப்பட்டுள்ளன என்றும் அவற்றில் 5 வரையான மனிதர்களுடையவை என்று கருதப்படும் எலும்பு எச்சங்கள் முழுமையாக அகழ்ந்து அகற்றப்பட்டுள்ளன என்றும் இந்த வழக்கில் பாதிக்கப்பட்டவர்கள் தரப்பில் நீதிமன்றில் வழக்காடும் சட்டத்தரணி ரணித்தா தெரிவித்தார்.

வழக்கு விசாரணை தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்றைய தினம் ஊணயூ 433 ஊளீ 2025 என்ற செம்மணி சிந்துபாத்தி மனித புதை புதைகுழி விவகாரம் யாழ். நீதிவான் நீதிமன்றில் நீதிவான் ஆனந்தராஜா முன்னிலையில் விசாரணைகளுக்காக எடுத்து கொள்ளப்பட்டது. ஆரம்பகட்ட அகழ்வின்போதே 6 மேற்பட்ட மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கபட்டமையால் இந்தப்புதைகுழிப் பகுதியில் மேலும் என்புதொகுதிகள் இருக்கக்கூடும் என சந்தேகிக்கபட்டமையால் குறித்த பகுதியை மனிதப் புதைகுழியாக அறிவிக்குமாறு பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் விண்ணப்பிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் இந்த வழக்கில் கடமையாற்றும் சட்ட வைத்திய அதிகாரி பிரணவன் தொல்பொருள் தடயவியல் பேராசிரியர் ராஜ் சோமதேவா ஆகியோரின் நிபுணத்துவ அபிப்பிராய அறிக்கையில் மூன்று விதமான விடயங்கள் இருவராலும் முன்வைக்கப்பட்டன. குறிக்கப்பட்ட அகழ்வு இடம்பெறும் இடத்தில் 1.6 அடி அளவிலேயே மனித என்பு எச்சங்களை அடையாளப்படுத்த கூடியதாக உள்ளது. குவியலாக, குழப்பமான சூழலில் மனித உடல்கள் புதைக்கப்பட்டுள்ளன. ஆடைகளோ அல்லது தனிப்பட்ட அணிகலன்களோ குறித்த இடங்களில் காணப்படவில்லை. எனவே இது சந்தேகத்திற்குரிய இரகசியமான புதைகுழி யாக இருக்கலாம் என அவர்கள் தெரிவித்திருந்தனர்.

தற்பொழுது அடையாளம் காணப்பட்ட எலும்புக்கூடுகளில் 17 எலும்புக்கூடுகள் பகுதியளவிலும் முழுமையாகவும் அடையாளம் காணப்பட்டு 5 மனித எலும்புக் கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. தொடர்ந்தும் பல மனித எச்சங்கள் அடையாளப்படுத்தபட்டுள்ள நிலையில் தொடர்ச்சியாக இந்த மனிதப் புதைகுழியை அகழவேண்டும் என்ற பரிந்துரை பேராசிரியர் மற்றும் சட்ட வைத்திய அதிகாரியால் மேற்கொள்ளப்பட்டது. பாதிக்கபட்டவர்கள் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டதரணியும் அகழ்வைத் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும் என வலியுறுத்திய நிலையில் அவர்கள் அகழ்வு குறித்து திருப்திபடும் வரையில் தொடர்ச்சியாக அகழ்வு பணிகள் முன்னெடுக்கபடவேண்டும் என்று நீதிமன்றம் கட்டளையாக்கியது.

அதற்கான செலவு விவரங்களை சட்ட வைத்திய அதிகாரியின் கோரிக்கையின் அடிப்படையில் சமர்பித்து நீதியமச்சினூடாக நிதியினை பெறுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கபடும் எனக் குறிப்பிடப்பட்டது.

மேலும் தொல்லியல் தடயவியல் பேராசிரியர் ராஜ் சோம தேவாவினால் இந்த அகழ்வுப் பணிகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் நீதிமன்றம் கட்டளையாக்கியது - என்றார்.

## ஆளும்...

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலதிக கேள்வியை முன்வைத்துக் கொண்டிருக்கையில், சபாநாயகர் குறுக்கிட்டு, தொடக்கத்தில் கேட்ட கேள்விக்கு ஏற்புடையதாகவே மேலதிக கேள்வியின்போது கேட்முடியும். வேறு கேள்வி கேட்க முடியாது என தெரிவித்தார்.

இதன்போது ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் சமிந்த விஜேசிறியின் கேள்வி நேரம் வந்தபோது, அவர் இதுதொடர்பில் சபாநாயகருக்கு எடுத்துக்கூறி, அமைச்சரின விடயதானத்துடன் உட்பட்ட எந்த கேள்வியையும் கேட்க முடியும். அமைச்சர் விரும்பினால் அதற்கு பதிலளிக்க முடியும் என தெரிவித்து, நிலையியற் கட்டளையின் இலக்கத்தையும் வாசித்துக்காட்டினார். என்றாலும் அதனை ஏற்றுக்கொள்ளாத சபாநாயகர் நிலையியற் கட்டளையின் வேறு உறுப்புரைகளை வாசித்துக்காட்டி, தனது நிலைப்பாட்டில் உறுதியாக இருந்துவந்தார்.

அதனைத் தொடர்ந்து தயாசிறி ஜயசேகர, கயந்த கருணாதிலக்க ஆகியோரும் சபாநாயகரின் கருத்துக்கு எதிராக இருந்து தங்களின் நிலைப்பாட்டை உறுதிப்படுத்தி வந்தனர். இதன்போது சபை முதல்வர் அமைச்சர் பிமல் ரத்நாயக்க எழுந்து, அதுதொடர்பான நிலையியல் கட்டளைகள் அனைத்தையும் வாசித்துக்காட்டி, அவ்வாறு செய்ய முடியாது என எதிர்கட்சியை பார்த்து தெரிவித்துவந்தார். இதன்போது அமைச்சர் பிமல்ரத்நாயக்கவுக்கும் எதிர்கட்சி உறுப்பினர்களுக்கும் இடையில் வாக்குவாதம் நீடித்துக்கொண்டு சென்றது.

இதன்போது எதிர்க்கட்சி உறுப்பினர் சமிந்த விஜேசிறி, சபாநாயகர் மற்றும் பிமல் ரத்நாயக்க ஆகியோரை பார்த்து, சர்வாதிகார முறையில் சபையை கொண்டுசெல்ல முற்படக்கூடாது. எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கருத்துக்களுக்கும் இடமளிக்க வேண்டும் என்றார். இதன்போது சபாநாயகர் குறுக்கிட்டு, இதுதொடர்பாக நன்கு ஆராய்ந்து அடுத்த நாடாளுமன்ற அமர்வில் தீர்வான்றை வழங்குவதாக தெரிவித்தார்.

அதன்போதும் சமிந்த விஜேசிறி எம்.பி. தொடர்ந்தும் இதுதொடர்பில் சபாநாயகருக்கு தெளிவுபடுத்த முயற்சித்தபோதும் சபாநாயகர், அதற்கு இனங்க மறுத்து, சற்று கோபத்துடன், இது 8ஆவது நாடாளுமன்றமோ 9ஆவது நாடாளுமன்றோ அல்ல. 10ஆவது நாடாளுமன்றம். அதனால் நிலையியற் கட்டளைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் மாத்திரமே இந்த சபையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

நிலையியற் கட்டளைகளை வீட்டில் இருந்து நன்கு படித்துவிட்டு வாருங்கள் என்றார். அதற்கு சமிந்த விஜேசிறி எம்.பியுடங கோபமுற்று, சபாநாயகர் என்றால், நாங்கள் ஒரு கேள்வி கேட்டால், அது நிலையியற் கட்டளையில் உள்ளதா என புத்தகத்தை விரித்து தேடிக்கொண்டிருக்காமல் உடனே பதில் சொல்லவேண்டும் என்றார்.

இறுதியில்சபாநாயகர்,இந்தவிடயங்களுக்கு அடுத்த வாரம் தீர்வு வழங்குவதாக தெரிவித்து, சபைநடவடிக்கைகளை முன்னெடுத்துச்செல்ல நடவடிக்கை எடுத்தார்.

## இடைநிறுத்தப்படாமல்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிந்துப்பாத்தி மனிதப் புதைகுழி தொடர்பாக நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவ் மேலும் தெரிவித்ததாவது:

கிருஷாந்தி கொலை வழக்கில் பிரதானமாகக் குற்றஞ்சாட்டப்பட்டவர் செம்மணியில் புதை குழிகள் இருப்பதாக நீதிமன்றத்தில் வெளிப்படையாக அறிவித்ததன் காரணமாகத்தான் அங்கே அகழ்வுப் பணிகள் அந்தவேளையிலேயே இடம்பெற்றன. ஆனால் அதற்குப் பின்னர் அந்த வழக்குக்கு என்ன நடந்தது என்றே தெரியாத நிலை ஏற்பட்டது. வழக்கு கிடப்பில் போடப்பட்டுவிட்டது.

அதற்குப்பின்னர் பல இடங்களிலே மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. நான் அறிந்த வரையில் வடக்கு மாகாணத்தில் குறைந்தது 13 இடங்களிலாவது மனிதப் புதைகுழிகள் இருக்கின்றன. மன்னாரில் ஒரு புதை குழி தோண்டப்பட்டது. அது இப்போது நிறுத்தப்பட்டிருக்கின்றது. கொக்குத் தொடுவாயிலும் ஒரு புதைகுழி தோண்டப்பட்டது. அதுவும் இப்போது நிறுத்தப்பட்டுள்ளது.

அப்படியாக அன்றி, தற்போது செம்மணி சிந்துப்பாத்தியில் தோண்டத் தொடங்கப்பட்டுள்ள புதைகுழி தொடர்பான விடயம் இடையில் நிறுத்தப்படாமல் முழுமயாக விவரங்கள் அறியப்படவேண்டும். அதிலும் விசேடமாக இளம் பிள்ளைகள், பெண்கள் போன்றோரும் அடித்துக் கொல்லப்பட்டிருக்கலாம் என்ற வகையிலே இந்த எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அதனாலே இதன் பின்னணியில் என்ன நடந்தது யார் அதற்குப் பொறுப்பாளிகள், எந்தக் கால

தொடர்ச்சி 6ம் பக்கம்....

# அரசியல் நோக்கத்திற்காகவே சிறு தொழிற்சங்கம் போராட்டம்

## சுகாதார அமைச்சர் எடுத்தெறிந்து பேச்சு

அரசியல் நோக்கத்துக்காக தமது தொழிற்சங்க பலத்தை காண்பிப்பதற்காக மிகச் சிறிய குழுவொன்று வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளது. வேலை நிறுத்தத்தை கைவிட்டு, பணிக்கு திரும்பிய பின்னர் கலந்துரையாடி பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்கு அழைப்பு விடுப்பதாக சுகாதாரத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

தம்புத்தேகம ஆதார வைத்தியசாலைக்கு நேற்று வெள்ளிக்கிழமை கண்காணிப்பதற்காக சென்றிந்தபோது செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட அமைச்சர் இவ்வாறு அழைப்பு விடுத்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பெரும்பாலான வைத்தியசாலைகளில் வழமை போன்று சேவைகள் இடம்பெறுகின்றன. மிகச் சிறிய குழுவொன்றே வேலை நிறுத்தம் என அறிவித்து நோயாளர்களை அசௌகரியத்துக்கு உள்ளாக்கிக் கொண்டிருக்கிறது. இது முற்று முழுதாக அரசியல் நோக்கத்துக்காக முன்னெடுக்கப்படும் செயற்பாடாகும்.

எவ்வாறிருப்பினும் அவர்களால் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகள் தொடர்பில் பேச்சுகளை முன்னெடுப்பதற்கு நாம் தயாராகவுள்ளோம். கடந்த வாரம் இவர்கள் பதில் செயலாளரை சந்தித்து கலந்துரையாடியிருக்கின்றனர். அதற்கு முன்னர் எம்முடனும் கலந்துரையாடியிருக்கின்றனர்.

வேலை நிறுத்தத்தை கைவிட்டு, கலந்துரையாடலுக்கு வருமாறு அழைப்பு விடுக்கின்றோம். வேலை செய்து கொண்டே கலந்துரையாடி தீர்வு காண முடியும். முந்தைய ஆளும்தரப்புகளிடம் தடியடி வாங்கியும், கண்ணீப்புகை பிரயோகத்தை எதிர்கொண்டும் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ளக்கூடிய நிலைமையே காணப்பட்டது. ஆனால் எமது ஆளும்தரப்பில் இவர்களுக்கு அவ்வாறானதொரு நிலைமை ஏற்படவில்லை.

நாம் ஆட்சியைப்பொறுப்பேற்று 4 மாதங்களுக்குள் சகல அரச உத்தியோகத்தர்களுக்கும் அடிப்படைச் சம்பள அதிகரிப்பை வழங்கியிருக்கின்றோம். அது மாத்திரமின்றி கொடுப்பனவுகளும் அதிகரித்துள்ளன. எனவே இவற்றை மறைத்து தமது தொழிற்சங்க பலத்தைக் காண்பிப்பதற்காக மக்களைப் பணயம் வைக்கவேண்டாம் என இந்த தொழிற்சங்கங்களிடம் கேட்டுக் கொள்கின்றோம்.

இது விளையாட்டல்ல. எனவே தயவு செய்து பணிக்கு திரும்புமாறு கேட்டுக் கொள்கின்றோம். அதன் பின்னர் கலந்துரையாடி பிரச்சினைகளுக்கு தீர்வு காண்போம் என்றார்.

## தயாசிறி எம்.பியின் நடத்தையை விசாரிக்க கயந்தவுக்குப் பதிலாக ஹக்கீம் நியமனம்

ஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகரவின் நாடாளுமன்ற நடத்தை தொடர்பில் விசாரணை செய்ய சபாநாயகரினால் நியமிக்கப்பட்ட குழுவிலிருந்து எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான கயந்த கருணாதிலக்க விலகியுள்ளார். இவருக்கு பதிலாக நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் நியமிக்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன சபைக்கு அறிவித்தார்.

நாடாளுமன்றம் வெள்ளிக்கிழமை காலை 9.30மணிக்கு கூடிய நிலையில் சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன இந்த அறிவிப்பை சபைக்கு விடுத்தார்

சபாநாயகர் சபைக்கு மேலும் அறிவித்ததாவது,

2025 மே மாதம் 20 ஆம் திகதி சபா பீடத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி தயாசிறி ஜயசேகரவின் நடத்தை தொடர்பில் எனக்குக்கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டை கவனத்தில் கொண்டு இது தொடர்பாக ஆராய்ந்து அறிக்கையிடுவதற்காக குழுக்களின் பிரதித் தவிசாளரான திருமதி ஹேமாலி வீரசேகர தலைமையில் வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் எதிர்க் கட்சியின் முதற்கோலாசான் கயந்த கருணாதிலக்க ஆகியோர் உள்ளிட்ட குழுவொன்று என்னால் நியமிக்கப்பட்டு 2025 மே மாதம் 23ஆம் திகதி இச்சபைக்கு அறிவிக்கப்பட்டது.

இந்த மூன்று உறுப்பினர்களைக் கொண்ட குழுவில் அதிக வேலைப்பளு காரணமாக தன்னால் சேவையாற்ற முடியாது என்பதை கயந்த கருணாதிலக்க 2025 ஜூன் 5ஆம் திகதி எழுத்து மூலம் தெரிவித்துள்ளதால், அவருக்கு பதிலாக அக்குழுவில் சேவையாற்றுவதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி ரவூப் ஹக்கீம் என்னால் நியமிக்கப்பட்டுள்ளார் என்பதை இச் சபைக்கு அறிவிக்கின்றேன் என்றார்.






## வீடமைப்பு அமைச்சின் திட்டங்களை உரிய காலத்தினுள் நிறைவேற்றுங்கள்

### ஜனாதிபதி அதிகாரிகளுக்குப் பணிப்புரை

வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சின் வேலைத் திட்டங்களை திட்டமிட்ட காலத்திற்குள் நிறைவு செய்யுமாறு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகளின் கீழ் நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சினால் செயல்படுத்தப்படும் வேலைத்திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வு தொடர்பான கலந்துரையாடல் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையில் இடம்பெற்றது.

இலங்கையை கவர்ச்சிகரமான சுற்றுலாத் தலமாக மாற்றுவதற்கு மேற்கொள்ளப்பட்டு வரும் நகர அபிவிருத்தித் வேலைத்திட்டங்களின் முன்னேற்றம் கொழும்பு மாவட்டத்தில் கால்வாய் சுத்திகரிப்பு மற்றும் கழிவு முகாமைத்துவத் திட்டங்கள், நீர்த்திட்டங்கள் மற்றும் வீடமைப்பு உதவித் திட்டங்கள் ஆகியவற்றின் செயல்பாடுகள் மற்றும் தற்போதைய முன்னேற்றம் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இந்த வேலைத்திட்டங்கள் ஒவ்வொன்றும் திட்டமிட்ட உரிய காலத்திற்குள் பூர்த்தி செய்யப்படுவதை உறுதி செய்யுமாறு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

நகர அபிவிருத்தி நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சர் கலாநிதி அனுர கருணாதிலக்க, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் ரஞ்சித் ஆரியரத்ன, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர்களான ரசல் அபோன்சு, கபில ஜனக்க பண்டார ஆகியோருடன் நிதி அமைச்சு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

## எதிர்க் கட்சி எம்.பிக்களின் செயல்களை ஆராய சில்லறைத்தனமான குழுக்களை நியமியாதீர்கள்

### கயந்த கருணாதிலக சபாநாயகரிடம் வலியுறுத்து

எதிர்க்கட்சி உறுப்பினர்களின் செயற்பாடுகள் குறித்து ஆராய்வதற்கு நாடாளுமன்றத்தில் சில்லறைத்தனமான குழுக்களை நியமிக்காதீர்கள். இது தவறானதொரு எடுத்துக்காட்டாக அமையும் என்று எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான கயந்த கருணாதிலக சபாநாயகரிடம் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற அமர்வின் போது ஒழுங்குப்பிரச்சினையை முன்வைத்து உரையாற்றுகையில் இதனை தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

எதிர்க்கட்சியின் உறுப்பினர் தயாசிறி ஜயசேகரவின் நடத்தை குறித்து ஆராய்வதற்கு மூவரங்கிய குழுவை நியமித்தீர்கள் (சபாநாயகரை நோக்கி) இதுவொரு சில்லறைத்தனமான செயற்பாடு, தவறான எடுத்துக்காட்டாக அமையும் என்று குறிப்பிட்டேன்.

இந்தக் குழுவில் இருந்து நான் விலகியுள்ளேன். 9 ஆவது நாடாளுமன்றத்தில் அப்போதைய உறுப்பினர்களான மனுச நாணயக்கார மற்றும் காஞ்சன விஜேசேகர ஆகியோர் முரண்பட்டுக் கொண்டார்கள். இதற்கும் அப்போது குழு நியமிக்கப்பட்டது. விசாரணைகளும் மேற்கொள்ளப்பட்டது. இறுதியில் ஒன்றும் நடக்கவில்லை. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டயனா கமகேவின் விவகாரத்திலும் இவ்வாறே குழு நியமிக்கப்பட்டது.

ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் முரண்பட்டுக்கொள்வது ஒன்றும் புதிதல்ல, எதிர்க்கட்சி உறுப்பினர்களின் செயற்பாடு தொடர்பில் ஆராய்வதற்கு குழு நியமிப்பது சில்லறைத்தனமானதொரு விடயம். இது தவறானதொரு எடுத்துக்காட்டாக அமையும் என்று குறிப்பிட்டேன். தற்போது ஆளும் தரப்பின் உறுப்பினர்களுக்கு எதிராக குழு நியமிக்குமாறு எதிர்தரப்பில் இருந்தும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. ஆகவே இவ்வாறான தவறான எடுத்துக்காட்டாக அமையும் தீர்மானங்களை தவிர்த்துக் கொள்ளுங்கள் என்றார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## வெளியிடப்படாத உண்மைகள்

நாடாளுமன்றத்தேர்தலின்போது,'மதுச்சாலைகளுக்கான அனுமதிகளை அரசியல் இலஞ்சமாக பயன்படுத்தினார்' என்ற குற்றச்சாட்டை முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின்மீதுதொடர்ச்சியாகமுன்வைத்துவந்தவர், தற்போது நாட்டின் தலைவராக இருக்கின்ற அநுரகுமார திசாநாயக்க. அவருடைய அரசியல் வாக்குறுதிகளில் முக்கியமான ஒன்று, இவ்வகையான ஊழல்களில் தொடர்புடையவர்களின்பெயர், விவரங்களைவெகுவிரைவில் மக்களுக்கு வெளிப்படுத்துவேன் என்பதாக இருந்தது. ஆனால் இன்று ஆட்சியை பிடித்துவிட்ட பின்னரும், அந்த உண்மைகள் வெளிப்படாமல் இருக்கின்றன.

அரசியல்மாற்றங்கள்அடிக்கடி மக்கள்எதிர்பார்ப்புகளைக் கிளப்புகின்றன – குறிப்பாக நீதியை மீட்பது, சிதைந்த நம்பிக்கையை புதுப்பிப்பது என்பன போல. ஆனால், அநுரகுமார தலைமையிலான ஆட்சியின் நடத்தை, தேர்தல் வாக்குறுதிகள் வெறும் கருத்தரங்க பேச்சாகவே இருந்தனவோ என்ற சந்தேகத்தை எழுப்புகிறது. இது, 'வெல்லும் வரை எல்லாம் கூறலாம்; வென்றதும் மறந்து விடலாம்' என்ற பழைய அரசியல் அடையாளத்தின் இன்னொரு பிரதிபலிப்பு தான்.

இதே நேரத்தில், இந்த விவகாரம் தற்போது நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்காக இருப்பது குறிப்பிடத்தக்கது. ஆனால், வழக்கு விசாரணை என்பது உண்மையை மறைப்பதற்கான திரை ஆகக் கூடாது. அதாவது,'வழக்குக் கோரிக்கையிலுள்ள விசாரணை உள்ளது, எனவே எதுவும் சொல்ல முடியாது' என்ற பொதுவான பதில், மக்களுக்கு நியாயமான பதிலாக அமையாது. தேர்தலில் ஊழலை எதிர்த்து குரல் எழுப்பிய ஒருவராக, தற்போது ஆட்சியின் உச்சியில் இருப்பவர் உண்மையை வெளிக்கொணர வேண்டிய கடமையில் பின்வாங்கக் கூடாது.

இந்த விவரம் வெளிவராத காரணம் என்ன? உண்மையாகவே சட்ட அடிப்படையில் தடைகள் உள்ளதா? அல்லது, அந்த விவரங்களில் ஆளும் தரப்பில் இருப்பவர்களும் தொடர்புடையவர்களா? இந்தக் கேள்விகள் மக்கள் மத்தியில் எதிர்வினையாக எழுகின்றன. இந்நிலையில், ஆளும்தரப்பின் மௌனம், அவ்வாறான ஊழல்களை மூடியே மறைப்பது போன்ற தவறான Political Messageஐ அனுப்புகிறது. இதுவே, புதிய ஆட்சியின் நம்பகத்தன்மையையும் கேள்விக்குள்ளாக்குகின்றது.

மதுச்சாலை உரிமங்கள் அரசியல் இலஞ்சமாக வழங்கப்படவேண்டும்என்பதோஅல்லதுஅந்தத்தனியுரிமை நிறுவனங்களின் வசதிக்கேற்ப வழங்கப்பட வேண்டும் என்பதோ என்பது ஒரு வழக்கமெனக் கடந்து போவதல்ல. இது அரசின் நம்பிக்கையை, நிர்வாகச் சுத்தத்தை, மற்றும் பொது நலத்தைக் குறித்த நேர்மையை பிரதிபலிக்கும் ஒரு தீவிரக் கட்டத்துக்குள் நம்மை அழைத்துச் செல்கிறது.

மக்களிடம் உண்மை வெளிவருவது தான், ஒரு ஜனநாயகத்தின் உயிராக இருக்க வேண்டும். உண்மையை மறைப்பதும், ஊழல் அரசியல்வாதிகளை பாதுகாப்பதும், எந்தவொரு புதிய ஆட்சிக்கும் ஏற்றதல்ல. வாக்குறுதியின் மீது அடித்த விருதுகள், வெகுசன நம்பிக்கையால் உருவான ஆட்சி, உண்மையின் வெளிச்சத்தை வழங்கத் தயங்கினால், அது நிழலாகவே மாறும்.

நேர்மையும் நம்பிக்கையும் அரிதாகிய இந்தச் சமயத்தில், அநுரகுமார தலைமையிலான ஆட்சி, மறைப்பை விட வெளிப்படைத்தன்மையைத் தேர்வு செய்ய வேண்டும். இல்லையெனில், ஆட்சி மட்டும் மாறி, பழைய அரசியலின் சூழ்நிலை தொடரும் என்பதை மீண்டும் நினைவுபடுத்தும் ஒரு சோர்வான நிகழ்வாகவே இது அமையும்.

# கொள்கையாவது, கூட்டணியாவது

**என். சத்தியமூர்த்தி**

தற்போது உள்ளாட்சி சபைகளின் தலைமை பொறுப்பை சுற்றி தமிழர் தரப்புகளிடையே அரங்கேறிவரும் பேரம் பேசும் அரசியலுக்கு கொள்கைக் கூட்டணி என்ற புது பெயரை அவர்களில் ஒரு சிலரே வழங்கி உள்ளனர். ஆனால், அதில் பொதிந்திருக்கும் களநிலை குறித்து அனைத்து தமிழ் மக்களும் அறிந்து கொள்ளும் வகையில் அவர்களே தொடர்ந்து நடந்து வருகிறார்கள். 'எங்க அப்பன் குதிருக்குள் இல்லை' என்ற அவர்களது கரைச்சல்கள், அது ஒரு போலி கூட்டணி; என்றே நிரூபிக்கிறன.

இப்போது தமிழ் காங்கிரஸ் தலைமையிலான 'சைக்கிள்' அணிக்கும், ஜனநாயகதமிழ்கூட்டணிக்கும்இடையே கொள்கைகூட்டணிஉருவாகிஇருக்கிறது என்றே கருதுவோம். அது உண்மை என்றால், உள்ளாட்சி தேர்தலுக்கு முன்னராவது ஏன் அவர்களில் யாரும் இதற்கு முனையவில்லை?

உண்மையைச் சொல்லவேண்டுமென்றால், கடந்த ஆண்டு நாடாளுமன்ற தேர்தலுக்கு முன்னராவது இது போன்ற கூட்டணி பேச்சு முன்னெடுக்கப்பட்டிருந்தால், அதனைக் கொள்கை கூட்டணி என்று இல்லையென்றாலும், ஏதோ ஒரு அரசியல் கூட்டணி என்றாவது ஏற்றுக்கொண்டிருக்க முடியும். ஆனால் தற்போதைய நிலைமையே வேறு. ஒரு சில ஊராட்சிகளின் தலைமைப் பதவியைப்பங்குவைத்துக்கொள்வதற்கு மட்டுமே ஒரே அணியில் நிற்கும் இரு தரப்பினரும், அதற்கு கொள்கைகூட்டணி என்று முலாம் பூசுவது நகைப்பிற்குரிய விடயம்.

கொள்கைக் கூட்டணி என்பது இன்று சந்தித்து பேசி, நாளை ஒப்பந்தந்தில்கைசாத்திடுவது மட்டுமல்ல. வேறொன்றும் இல்லை என்றாலும், இரு தரப்பிலுமுள்ள கட்சிகளின் பொதுக் குழு, மத்திய குழு ஆகியவை சந்தித்துப் பேசி, விவாதித்து, ஒரு முடிவு எட்டப்பட்டிருக்கவேண்டும்.

இது அந்தக் கட்சிகளின் உள்கட்சி விவகாரம் மட்டுமே என்று ஒதுக்கிவிடமுடியாது. இந்தக் கொள்கைக் கூட்டணி நிலைத்திருக்க வேண்டுமென்றால், அது குறித்து அடிமட்ட தொண்டன் வரையிலும் தெளிவான அறிவு பெற்றிருக்கவேண்டும். இந்த விடயத்தில் அவ்வாறு நிகழவில்லை.

### நிலைமை வேறு

சரி, இந்தக் கொள்கைக் கூட்டணி உள்ளாட்சி தலைமைப் பதவிகளுக்கு மட்டும் தானா, அல்லது அடுத்துவரும் மாகாண சபை தேர்தலுக்கும் பொருந்துமா? அவ்வாறானால், பதிமூன்றாவது திருத்தத்தை ஏற்றுக்கொள்ளதா கொள்கை கூட்டணி, எவ்வாறு அதன் மூலம் அடைந்த மாகாண சபை தேர்தலில் போட்டியிட முடியும்?

முன்னர் நடந்த 2013 வடக்கு மாகாண சபை தேர்தலின்போதும் தமிழ் காங்கிரஸ் தலைவர் கஜேந்திரகுமார் இதே கேள்வியை எதிர்கொண்டார். தற்போது, அவருடன், ஜனநாயக தமிழ் கூட்டணியின் தலைவர்களும் இந்த கேள்விக்குப் பதில் சொல்லவேண்டும்.

இன்று ஜனநாயகக் கூட்டணியாக அவதாரம்எடுத்திருக்கும்கட்சிகள்பலவும் அன்று தமிழ் அரசு தலைமையிலான தமிழ் தேசியகூட்டமைப்பின்உறுப்புக்கட்சிகள். அந்தத் தேர்தலில் அவர்கள் அனைவரும் ஒன்றாகக் களம் இறங்கினார்கள். அன்று அவர்களைப் பொறுத்தவரையில், பதிமூன்று குறித்து எந்தவிதமான குழப்ப நிலையும் இருக்கவில்லை. இன்றோ, நிலைமை வேறு.

குறிப்பாக, தமிழ் அரசுக் கட்சியினர், ஜனநாயகக் கூட்டணியின் தலைமைகளை குறிவைத்து இந்தக் கேள்விகளை எழுப்புவார்கள். அதிலும், கொள்கைக் கூட்டணியின் உள்வீட்டுக் குழப்பங்களைப் பொதுவெளியில் நோண்டுவார்கள்.

இந்த கேள்விகளுக்கான பதில்களை ஜனநாயக கூட்டணித் தலைவர்கள் தயாராக வைத்திருக்கவேண்டும். அந்துப் பதில்கள் மக்கள் ஏற்றுக்கொள்ள கூடியதாகவும் அமைய வேண்டும். ஆனால், பிரச்சினையே, மாகாண சபை தேர்தலில், அதிலும் குறிப்பாக வடமாகாணத்தில், தற்போதைய கொள்கைக் கூட்டணி மொத்த ஆசனங்களை எவ்வாறு பங்கு வைத்துக் கொள்ளப் போகின்றனர், என்ற கேள்வியில் தொடங்கும். காரணம், இரண்டுஅணிகளிலும்இருக்கும்உறுப்புக் கட்சிகள் அதிகம். அதைவிட அதிகம், அவற்றில் சிலவற்றில் தலைவர்களின் எண்ணிக்கை மற்றும் எதிர்பார்ப்புகள்.

அந்தத் தலைவர்கள் அனைவருமே மாகாண சபைத் தேர்தலில் ஒரு வெற்றிக் கூட்டணியில் பங்குபெற்று அமைச்சர்களாக ஆசைபடுபவர்கள். ஆனால், அவர்களுக்கு என்று தனிச் செல்வாக்கிலும், அவர்களுடைய கட்சிகளின் செல்வாக்கினாலும், வெற்றிபெறத்தேவையானவாக்குகளைப் பெறாதவர்கள். பெறமுடியாதவர்கள்.

அதேசமயம் இரு அணிகளிலும் அங்கத்துவம் வகிக்கும் முக்கிய கட்சிகளின்தலைவர்களும்தங்களுடைய வெற்றியைக் குறி வைத்தே காய் நகர்த்தி வருகிறார்கள். குறிப்பாக, நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற முடியாத தலைவர்கள் மாகாண சபையை குறி வைப்பார்கள். அவர்களது சதோதரக் கட்சிகளின் தலைவர்கள் தங்களது கைதடிகளை களமிறக்க துடிப்பார்கள்.

இது தமிழ் அரசின் சுமந்திரனுக்கும் பொருந்தும். உள்ளாட்சி தேர்தல்கள் முடிந்தாலும் அவற்றிற்கான தலைமைகளைத் தெரிவுசெய்யும் முன்னரே அவர் தன்னை, கட்சியின் வட மாகாண முதலமைச்சர் வேட்பாளர் என்று சிலாக்கித்தது எதில் சேர்த்தியோ?

### பெரிய அண்ணன்

இதுதான் இப்படி என்றால், தமிழ் அரசுக் கட்சியின் நிலைப்பாடும் தற்போதைய நிலைமைக்கு காரணம். தாங்கள் அதிக ஆசனங்களைப் பெற்ற உள்ளாட்சி அமைப்புகளில் தங்களது பிரதிநிதிகளே தவிசாளர், பிரதி தவிசாளர் என்ற இரண்டு தலைமை பொறுப்புகளையும் ஏற்க வேண்டும் என்பது,தவறான அரசியல் அணுகுமுறை. இந்தப் பெரிய அண்ணன் தனமான தமிழ் அரசின் அணுகுமுறையே, தமிழ்

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# கொள்கையாவது,.....

4ம் பக்கத் தொடர்ச்சி...........

தேசியக் கூட்டமைப்பு உடைவதற்கும் முக்கிய காரணம்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் நடந்தேறாத உள்ளாட்சித் தேர்தல்களில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகள் தனித்துக் களமிறங்கவேண்டும் என்று சுமந்திரன் முன் வைத்த கருத்தே கூட்டமைப்பு உடைவதற்குக் காரணம் என்று கூறப்பட்டது. என்றாலும், அது குறித்து விரிவான விவாதங்கள் மேற்கொள்ளப்பட்ட பின்னரே அந்த முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்கப்பட்டது என்ற சுமந்திரனின் தொடர் அறிக்கைளை எதிர்த்து யாரும் கேள்வி எழுப்பவில்லை. ஆனால், தற்போது உள்ளாட்சி தேர்தல் முடிந்த பின்னர், தமிழ் அணிகள் சேர்ந்து நின்றாலே அமைப்புகளின் தலைமைப் பொறுப்பை தக்க வைத்துக் கொள்ள முடியும் என்ற நிலைமை தோன்றிய பின்னரும், தமிழ் அரசுதான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்று கூறி வருவது தமிழ் மக்களின் எதிர்காலத்திற்கு உகந்ததாக இல்லை.

இது சுமந்திரனின் முடிவா, அல்லது கட்சி; அரசியல் குழுவின் வழிகாட்டுதலா என்பது தெரியவில்லை. இடைபட்ட காலத்தில், தமிழ் அரசு மற்றும் தமிழ் காங்கிரஸ் ஆகிய இரு அணிகளும் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சிகளில் பதவிகளைப் பங்கு வைத்துக்கொள்ள தங்களுக்குள்ளும் கலந்து பேசின. தமிழ் அரசிடம் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை இல்லை என்ற காரணத்தால், அந்த பேச்சு தோல்வி அடைந்தது என்று கருத இடமிருக்கிறது. ஆனால், அந்தச் சந்திப்பில், இரு தரப்பும் தவிசாளர், பிரதித் தவிசாளர் பதவியை பங்கு வைத்துக்கொள்வதில் இணக்கப்பாடை அடைந்திருந்தால், கஜேந்திரகுமார் அப்போதும் கொள்கை கூட்டணி என்று அதனை விவரித்திருப்பாரா? அல்லது, தவிசாளர்கள் தொடர்பில் இணக்கப்பாடு மட்டும் போதாது. காங்கிரஸின் கொள்கைகளையும் தமிழ் அரசு ஏற்றுக் கொண்டதாக ஒப்பந்தம் கைசாத்திட வேண்டும் என்று நிர்பந்தித்திருப்பாரா?

இந்தக் கேள்விக்கு விடை கிடைத்தாலே, தற்போது அமைந்துள்ளது கொள்கை கூட்டணியா இல்லையா என்பது தெளிவாகி விடும். ஆனால், அதற்காக மட்டும் தமிழ் அரசின் நிலைபாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது.

**யார் பெரியவர்?**

தமிழ் அரசுக் கட்சியும், பதவி ஆசையால்தான் உந்தப்பட்டு, தவிசாளர், ஏன், பிரதித் தவிசாளர் பதவியைக்கூட பிற தமிழ்க்கட்சிகளுடன் பங்கிட்டுக்கொள்ளத் தயாராக இல்லை. இதுவும் கொள்கை சார்ந்த விடயம் அல்ல. 'யார் பெரியவன்?' என்ற கேள்வியைத் தாங்களே கேட்டு, 'வீடு' சின்னமே பெரியது என்று அடுத்தவர்கள் மீது திணிப்பதிலேயே குறியாக இருக்கிறார்கள்.

இதன் காரணமாகவும்தான், இதுவரை இரண்டு தரப்பினரும் ஒதுக்கி வைத்திருந்த டக்ளஸ் தேவானந்தாவின் ஈபிடிபி கட்சியை போட்டிபோட்டுக் கொண்டு 'காக்கா' பிடிக்கிறார்கள். பிறர் தயவின்றி தனியாக எந்த ஊராட்சி அமைப்பிலும் தலைமை பதவியை தமிழ் அரசு கட்சி பிடிக்க இயலாது. கொள்கை கூட்டணியின் நிலைமையும் அதுதான்.

என்ன, கடைசிவரை காத்திருந்துவிட்டு, தமிழ் அரசு, தேவானந்தாவை அணுகி உள்ளது. கொள்கைக் கூட்டணிக்குள் இப்போதே முரண்பாடு. எங்கே தேவானந்தாவுடன் சேர்ந்த அரசியல் செய்தால், விடுதலை புலிகள் அமைப்பின் ஆதரவாளர்களால் அவர் மீது கட்டப்பட்ட 'துரோகி' பட்டம் தன் மீதும் படர்ந்து விடுமோ என்று கஜேந்திரகுமாரிற்கு சந்தேகம். அதை விட முக்கியம், சுமந்திரன் மீது இருப்பது போலவே, டக்ளஸ் தேவானந்தாவின் அரசியல் ஆளுமை மீதும் அவர்கள் அனைவருக்குமே இருக்கும் எதிர்ப்பு, பயம்.

எனவேதான், ஒருபக்கம் தங்கள் அணியை சேர்ந்த சித்தார்த்தன் தேவானந்தாவுடன் தொடர்பில் இருந்தபோதும். அது குறித்த பத்திரிகை செய்தியை 'பொய்' என்று கஜேந்திரகுமார் கருத்து தெரிவித்தார். அவர்களைப் பொறுத்தவரையில் இது உள்வீட்டு பிரச்சினை மட்டுமே.

பத்திரிகையையும் பத்திரிகையாளரையும் சாடும் முன், அவர், தேவானந்தா குறிப்பிட்டதுபோல், சித்தார்த்தன் அவரை தொலைபேசி மூலம் அணுகியிருந்தாரா, என்று தெளிவுபடுத்திக்கொண்டிருக்கலாம். அல்லது, தன் அறிவு இல்லாமல் சித்தார்த்தன் தேவானந்தாவுடன் பேசியதை குறை கூற முடியாமல், பத்திரிகையாளரை அவர் வறுத்தெடுத்தாரா? அவ்வாறென்றால், இதுதான் கொள்கைக் கூட்டணியின் இலட்சணமா?

இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக, மறக்கடிக்கப்பட்டுவிட்ட ஆனந்தசங்கரி, பலகாலத்திற்குபின் பத்திரிகையாளர்களைச் சந்தித்து, அனைத்தத் தமிழ் கட்சிகளும், தந்தை செல்வாவல் உருவாக்கப்பட்டு, தன் தலைமையில் இயங்கால் இருக்கும் தமிழ் விடுதலை கூட்டணியின் கீழ், ஒருமித்து பயணிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார். ஆனாலும், அவருக்கு ஆசையும் எதிர்பார்ப்பும் இன்னமும் அதிகம் தான்!

**ஜல்லிகட்டு மாடு**

கடந்த கிழமை, இதே பத்தியில் கூறப்பட்ட சில கருத்துகளுக்கு நண்பர் சிவாஜிலிங்கம் பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்றில் மறுப்பு தெரிவித்துள்ளார். அந்தக் கருத்துகள் அவரை புண்படுத்தி இருப்பதால், அதற்கு வருத்தம் தெரிவிக்கும் அதேநேரம், அவரை 'ஜல்லிகட்டு மாடு' என்று வர்ணித்தது, அவரை யாராலும் அடக்க முடியாது என்ற கருத்தில்தானே தவிர. அவர் மனதை காயப்படுத்தவல்ல.



காலைக்கதிர் Kalaikkathir

## இடைநிறுத்தப்படாமல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டத்திலே இது நடந்தது வெளிப்படையாகத் தெரியவரவேண்டும்.

எனவே ஆளும்தரப்பிடம் நாம் முன்வைக்கும் கோரிக்கை, பணம் இல்லை என்றோ வேறு வசதிகள் இல்லை என்றோ சாக்குப் போக்குகளைச் சொல்லாமல் இப்போது அறியப்படும் செம்மணிப் புதைகுழி பற்றிய விசாரணைக்கு முழுமையான பங்களிப்பை ஆளும்தரப்பு வழங்கவேண்டும், வெளிப்படைத் தன்மையோடு இந்த விடயம் கையாளப்படவேண்டும். உண்மை கண்டறியப்படவேண்டும் - என்றார்.

## பிரபாகரனின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவித்தல் விடுக்கப்பட்டவை என்றும், அவற்றில் அபாயகரமான பொருட்கள் காணப்பட்டதாகவும் பல தரப்பினராலும் தெரிவிக்கப்பட்டது.

அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர மற்றும் பிவிதுரு ஹெல உருமயவின் தலைவர் உதய கம்மன்பில ஆகியோர் இது தொடர்பில் தெரிவித்திருந்து கருத்துக்கள் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தன.

தயாசிறி ஜயசேகர கடந்த புதன்கிழமை இவ்விடயம் தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் வாக்குமூலமளித்திருந்தார். இந்நிலையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் அருச்சுனா தற்போது இவ்வாறானதொரு விடயத்தைத் தெரிவித்திருக்கின்றார்.

## உப்பு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது,

நாட்டில் உப்புக்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டை போக்குவதற்காக உப்பு இறக்குதிக்கு சந்தையை திறந்துவிட்டோம். அதற்கு இருந்த வரையறையை நீக்கி இருந்தோம். என்றாலும் இறக்குமதி செய்வதற்கு உணவு கட்டுப்பாட்டு பிரிவில் அதற்கான அனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டும். உப்பு, உணவு பொருட்களை இறக்குமதி செய்வதாக இருந்தால், அதுதான் நாட்டின் சட்டம்.

அதன் பிரகாரம் இதுவரை இரண்டு இலட்சத்தி 68 ஆயிரம் மெட்ரிக்தொன் உப்பு இறக்குமதிசெய்ய அனுமதிபெறப்பட்டிருக்கிறது. அந்தளவு உப்பு இறக்குமதி செய்யப்படும் என நாங்கள் நினைக்கவில்லை. நேற்று முன்தினம் வரை 15ஆயிரத்தி 800 மெட்ரிக்தொன் வரை நாட்டுக்குள் இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறது. இந்த தொகையில் அயடின் மற்றும் அயடின் அல்லாத இரண்டு வகை உப்பும் வந்திருக்கிறது.

இவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட உப்பு ஒரு கிலோவின் அதிகபட்ச விலை 84, 85 ரூபாவுக்கும் குறைந்தபட்ச விலை 65 ரூபாவுக்கும் விற்பனைசெய்யவே நடவடிக்கை எடுத்திருக்கிறோம். என்றாலும் சந்தையில் இந்த உப்பை 120 ரூபாவில் இருந்து 280 ரூபாவரை விற்பனை செய்ய முயற்சிக்கின்றனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள உப்புக்கான தட்டுப்பாட்டை பயன்படுத்தி, அதன் மூலம் விலைஅதிகரித்து விற்பனைசெய்ய முயற்சிக்க வேணடாம் என இறக்குமதியாளர்களுக்கு தெரிவித்திருக்கிறோம். எனவே இந்த நடவடிக்கையில் நுகர்வோருக்கு பாதிப்பு ஏற்படுமாக இருந்தால், அதனை தவிர்ப்பதற்கு நாங்கள் நடவடிக்கை எடுப்போம் என்றார்.

## சாராய ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியோர் முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

ரவூப் ஹக்கீம் எம்.பி. தெரிவிக்கையில், சீனி உற்பத்திச் சாலைகளின் நட்டத்தை போக்கிக்கொள்வதற்காக 475 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும் ஒரு லீட்டர் எத்தனோலை 800 ரூபாவாக அதிகரிக்க தீர்மானித்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். இதனால் பல இடைப் பிரச்சினைகள் தோன்றுகின்றன.

குறிப்பாக எத்தனோல் விலையை அந்தளவு அதிகரிக்கும்போது சந்தையில் மதுபானங்களின் விலை அதிகரிக்கப்படும். அவ்வாறு அதிகரிக்கப்படும்போது அதற்கு நிகராக நிச்சயமாக கசிப்பு உற்பத்தியும் அதிகரிக்கப்படும். கசிப்பு உற்பத்தி அதிகரிக்கப்பட்டால், ஆளும்தரப்புக்கு கிடைக்கும் வரி வருமானம் குறைவடையும். இதனால் எமது வருமான இலக்கை அடையமுடியாமல் போகிறது.

இந்த ஆபத்தான நிலைமையை புரிந்துகொண்டே எத்தனோல் விலை அதிகரிப்பு தொடர்பில் தீர்மானிக்கவேண்டும். அதேநேரம் இந்த நடவடிக்கையை மேற்கொள்ளும்போது, நிதி அமைச்சுடன் சம்பந்தப்பட்டு, வருமான இலக்கை அடைந்துகொள்ள இருக்கும் பிரச்சினை தொடர்பில் புரிந்துகொண்டு இந்த விடயத்தை மேற்கொள்ள வேண்டும் என்றார்.

அமைச்சர் தொடர்ந்து பதிலளிக்கையில், எத்தனோல் ஒரு லீட்டர் 1500 ருபாவுக்கு இருக்கும்போதும் சாராயம் ஒரு போத்தல் 3500, 4000ஆயிரம் ரூபாவுக்கே விற்பனை செய்யப்பட்டது. தற்போது எத்தனோல் ஒரு லீட்டர் 475 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும்போதும் சாராயம் போத்தலின் விலை குறையவில்லை.

எத்தனோல் ஒரு லீட்டரில் 3 சாராய போத்தல்கள் உற்பத்தி செய்ய முடியும். அப்படியானால் சாராயம் ஒரு போத்தல் எந்தளவு குறைந்த விலைக்கு விற்பனை செய்ய முடியும் என்பதை புரிந்துகொள்ள முடியும். அதனால் எத்தனோல் விலையை 475 ரூபாவில் இருந்து 800 ரூபாவரை அதிகரிப்பதால், சாராய உற்பத்தியாளர்களுக்கு எந்த பிரச்சினையும் எற்படப்போவதில்லை.

அத்துடன் கசிப்பு அருந்துபவர்கள் நாள் ஒன்றுக்கு இரண்டு இலட்சம் லீட்டர் பயன்படுத்துகின்றனர். இதனை நிறுத்துவதற்கே சீனி உற்பத்தி செய்கின்ற நிலையங்களுக்கு அனுமதிபத்திரம் வழங்கி, குறைந்த விலைக்கு சாராயம் போத்தல் ஒன்றை விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்திருந்தேன்.

இந்த விடயத்தில் ஒரு பிரச்சினை இருக்கிறது. இதுதொடர்பில் நான் ஜனாதிபதிக்கு அறிக்கை ஒன்றை வழங்குவேன். நிதி அமைச்சில் இருப்பவர்களில் சாராய கம்பனிகளிடமிருந்து பணம்பெற்றுக்கொள்ளும் ஓரிரு நபர்கள் இருக்கின்றனர். அவர்களின் பெயர் விவரங்களை ஒருசில தினங்களில் வெளிப்படுத்துவேன். அவர்களே இந்த விடயங்களை தடுத்துவருகின்றனர்.

அதனால் இதனைச் சரிசெய்யவேண்டும். இல்லாவிட்டால் இந்தத் தொழிற்சாலைகளை முன்னுக்குக் கொண்டுசெல்ல முடியாமல் போகும். அதனால் எத்தனோல் விலையை அதிகரிப்பதால், சாராயத்தின் விலை அதிகரிக்கப்படப்போவதில்லை என்றார்.

## தமிழ் மக்களின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களுக்காக பல சாத்விக போராட்டங்களில் அவர் முன்னின்றார். எம்முடன் எப்போதுமே அவருக்கு நல்லுறவு இருந்தது என்றார்.

தமிழ்அரசுக்கட்சியின் நாடாளுமன்றக்குழுத் தலைவரான சிறீதரன் தனது உரையில் தெரிவித்ததாவது:

ஈழத்தமிழர்களின் தன்னாட்சி உரிமைக்காகவும், நீடித்த செழுமைமிகு இருப்புக்காகவும் தொலைநோக்கான வழிகாட்டலை வழங்குகின்ற பொறுப்பை ஏற்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியையும் மக்களையும் கொள்கைப் பற்றுறுதியோடு தீர்க்கமான வழிமுறைகளில் முன்னேற்றிச் சென்ற ஒரு பெருந் தலைவராகவே அவரது மறைவின் பின்னும் மாவை சேனாதிராசாவுக்கான அடையாளம் மக்கள் மனங்களில் நிலைபெற்றிருக்கிறது.

நாங்கள் ஒரு சுதந்திர அரசியல் இயக்கமாக - மக்கள் திரட்சி நிறைந்த தேசமாக எம்மை உருவாக்கிக் கொள்ளாதவரை, பலவீனமான அரசியல் கோரிக்கையாளர்களாகவே இருக்க வேண்டி

ஏற்படும் என்பதை உணர்ந்தவராக, தமிழ் அரசுக் கட்சியை மக்கள் பேரியக்கமாக வழிநடத்திச் செல்லவேண்டுமென்ற நேர்த்திமிகு சிந்தனையில் பின்வாங்காத பெருந்தலைவராக இருந்த எனது

அரசியல் வழிகாட்டியும் எமது கட்சியின் மறைந்த பெருந்தலைவருமாகிய மாவை.சேனாதிராசாவின் தடங்களை இறுகப்பற்றியபடி, சரிந்துபோயிருக்கக் கூடிய தமிழ் அரசின் செயலூக்கத்தினை மீள நிலைநிறுத்துவதற்காக தமிழ்த் தேசிய ஆர்வலர்களோடும், தொண்டர்களோடும் இணைந்து ஒழுகி எமது அரசியல் இயக்கத்தை நிலைநிறுத்துவதன் வழி, ஈழத் தமிழினத்தின் விடுதலைநோக்கிய பயணத்தை இதயசுத்தியோடு முன்கொண்டுசெல்ல உழைப்பதுவே அன்னாருக்கான உயரிய அஞ்சலி என்பதை உணர்ந்த ஒருவனாக அத்தகையதோர் மன உறுதியோடு அவரது மறைவுக்கான எனது அஞ்சலிகளையும் அனுதாபங்களையும் பகிர்ந்து கொள்கிறேன் என்றார்.

## ஊழல் எதிர்ப்புப் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எங்குகொண்டு சென்றார் என்பது எமக்கு தெரியாதென பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற அமர்வில் வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையின்போது புதிய ஜனநாயக முன்னணியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

நல்லாட்சி காலத்தில் அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அப்போதைய அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க ஆகியோர் 2015.01.21 ஆம் திகதியன்று சமர்ப்பித்த அமைச்சரவை பத்திரத்துக்கு அமைய ஊழல் எதிர்ப்புக் குழு அலுவலகம் உருவாக்கப்பட்டது.

பிரதமர் அலுவலகத்தின் உருவாக்கப்பட்ட ஊழல் எதிர்ப்புக் குழு அலுவலகம் சட்டரீதியிலான முறையில் உருவாக்கப்படாத நிலையில் அமைச்சரவையால் அவ்வப்போது எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு அமைய பிரதமர் அலுவலகம் ஊடாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தக் குழுவில் ரணில் விக்கிரமசிங்க, மங்கள சமரவீர, பாட்டலி சம்பிக்க ரணவக்க, விஜேதாஸ ராஜபக்ச, ரவூப் ஹக்கீம், சரத் பொன்சேகா, சம்பந்தன், சுமந்திரன், வெலியமுன, ஜயம்பதி விக்கிரமரத்ன, மலிக் விக்கிரமரத்ன, தம்மிக கங்கனாத், அநுரகுமார திசாநாயக்க, ஆனந்த விஜேபால மற்றும் குழுவின் செயலாளர்கள் ஆகியோர் ஊழல் எதிர்ப்பு குழுவின் உறுப்பினர்களாக அங்கம் வகித்தனர்.

ஊழல் எதிர்ப்பு குழு செயலகத்துக்கு 475 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்ற நிலையில், 687 பொதுவான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இந்த குழு தொடர்பான ஆவணங்கள் பிரதமர் செயலகம் வசமில்லை - என்றார்.

இதனைத்தொடர்ந்து எழுந்து மேலதிக கேள்விகளை முன்வைத்த சாமர சம்பத், ஊழல் எதிர்ப்பு குழுவின் பணிப்பாளர் நாயகம் பற்றிய கேள்விக்கு பதில் கிடைக்கவில்லை. இந்த குழுவில் தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால ஆகியோர் அங்கம் வகித்ததை பிரதமர் ஏற்றுக்கொண்டுள்ளார் - என்றார்.

இதற்கு எழுந்து பதிலளித்த பிரதமர், ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மற்றும் அமைச்சர் ஆனந்த விஜேபால ஆகியோர் ஊழல் எதிர்ப்புக் குழுவில் அங்கம் வகித்தது ஒன்றும் புதிதல்ல, ஜனாதிபதி பலமுறை இதனை பகிரங்கமாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த குழுவின் ஒருசில ஆவணங்கள் பிரதமர் அலுவலகத்தில் இல்லை. முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அந்த ஆவணங்களை எங்கு கொண்டு சென்றார் என்பது எமக்கு தெரியாது என்றார்.

## பிறந்த..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழக்குத் தொடர்பில் பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப் பட்டுள்ளதாக கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க நேற்றுமுன்தினம் (05) இந்தத் உத்தரவை பிறப்பித்தார்.

சிறைத்தண்டனைக்கு மேலதிகமாக 20 ஆயிரம் ரூபா அபராதமும் விதித்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டதுடன் அபராதம் செலுத்தப்படாவிட்டால் மேலும் 6 மாதங்கள் சிறைத்தண்டனையும் விதித்து நீதிபதி உத்தரவிட்டார்.

பிரதிவாதியான 3 குழந்தைகளின் தாயான குறித்த பெண்ணும் மற்றும் அவரது கணவரும் நடத்தும் சட்டவிரோத கருக்கலைப்பு மையத்திற்குச் சென்ற ஒரு பெண்ணை பிரசவத்திற்குப் பிறகு கருக்கலைப்பு செய்யாமல் குழந்தையை விற்க வற்புறுத்தப்பட்டதுடன் குழந்தையைப் பெற்றெடுத்த பிறகு பிரதிவாதி 2 நாள் குழந்தையை 75 ஆயிரம் ரூபாய்வுக்கு விற்றபோது பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இதேவேளை குற்றம் சாட்டப்பட்டவர் செய்த குற்றம் முழு மனித இனத்தையும் அதிர்ச்சிக்குள்ளாக்கும் ஒரு மனிதாபிமானமற்ற செயல் என்றும் நீதிபதி தனது தீர்ப்பில் சுட்டிக்காட்டினார்.

குறித்ததாயார் செய்தசெயல் கடுமையானது மற்றும் வருந்தத்தக்கது என்றும் இதுபோன்ற குற்றங்களை இலகுவாகக்

கருத முடியாது என்றும் இதுபோன்ற குற்றங்களுக்கு மென்மையான தண்டனைகளை வழங்குவது சாத்தியமில்லை என்றும் நீதிபதி சுட்டிக்காட்டியமை குறிப்பிடத்தக்கது.

## பத்தே ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கியுள்ளமை பாரதூரமானது என ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

பொதுமன்னிப்பு வழங்கும்போது அடிப்படை வழிமுறைகளை பின்பற்ற வேண்டும் என்று உயர்நீதிமன்றம் கடந்த காலங்களில் பலமுறை தீர்ப்பளித்துள்ள நிலையில் தான் குறுகிய நாட்களுக்குள் ஜனாதிபதியால் பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற அனுதாபப் பிரேரணையின் போது உரையாற்றுகையில் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

காலஞ்சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா தமிழ் மக்களின் விடுதலைக்கு அரசமைப்புக்குட்பட்ட வகையில் குரல் கொடுத்தார். பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தமிழர்கள் தடுத்து வைக்கப்பட்டமைப்பு எதிர்ப்பு தெரிவித்து தமிழர்களின் உரிமைகளுக்காகவே அரசியலில் ஈடுபட்டார்.

அநுதாரபுரம் மேல் நீதிமன்றத்தில் எச்.சி 692018 இலக்க வழக்கில் 2025.05.02 ஆம் திகதியன்று தண்டனைச் சட்டக்கோவை 386 பிரிவின் பிரகாரம் அதுல சேனாரத்ன என்பவருக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இந்தநபருக்கு 2025.05.12 ஆம் திகதி வெசாக் தினத்தன்று ஜனாதிபதியால் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

2025.05..02 ஆம் திகதி தண்டனை தீர்ப்பளிக்கப்பட்ட கைதிக்கு 2025.05.12 ஆம் திகதியன்று ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கியுள்ளமை மிகவும் பாரதூரமானது. ஜனாதிபதி மன்னிப்பின்போது கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் தொடர்பில் கடந்த காலங்களில் உயர்நீதிமன்றம் பல தீர்ப்புக்களை வழங்கி குறிப்பிட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் வழங்கப்பட்ட ஜனாதிபதி பொதுமன்னிப்பை உயர்நீதிமன்றம் இரத்துச் செய்து அவருக்கு தண்டப்பணம் விதித்துள்ளது. ஆகவே இந்த பதிவுகளில் இருந்து பாடம் கற்றுக்கொள்ள வேண்டும் என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

காலைக்கதிர் Kalaikkathir

உ
முருகன் துணை

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

# செவ்வழி நயனம்

## வழிபடுமுறை



இறைவன்எங்கும்இருக்கின்றான்எங்கும்இருக்கும்இறைவனை நாம் எங்கும் வணங்கலாம் என்றாலும் ஆலயத்தில் சென்று வணங்குவதே சிறப்பானதுஆலயம் என்ற சொல்லைப்பிரித்தால் ஆ+ லயம் ஆ என்றால் ஆன்மா

லயம் என்றால் லயித்தல் அதாவது ஒன்றுதல் 'ஆன்மாக்கள் இறைவனை ஒரு மனதுடன் வணங்குவதற்கான இடம்' என்ற பொருள் கொண்டது

ஆலயத்தைக் கோயில் என்றும் அழைப்பர் கோயில் என்னும் சொல் கோ + இல் எனும் இரண்டு சொற்களின் சேர்க்கையால் உருவானது இங்கே கோ என்பது இறைவனையும் இல் என்பது இல்லம் அல்லது வீடு என்பதையும் குறிக்கும் எனவே கோயில் என்பது 'இறைவன் வாழுமிடம்' என்னும் பொருள் தருகிறது. பொது வழக்கத்தில் கோயில் மற்றும் கோவில் என்ற இரு சொற்களும் வழக்கத்தில் உள்ளன நாம் ஒவ்வொருவரும் கோவிலுக்கு செல்லும் பொழுது குளித்து தூய்மையான ஆடைஅணிந்து செல்லவேண்டும் ஆலயத்தை நெருங்கியதும் கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்பதற்கிணங்க கோபுரத்தை இரு கை கொண்டுவணங்கி விட்டு பின்னர் உள்ளே சென்று பலிபீடத்திற்கு இப்பால் ஆண்கள்அட்டாங்க நமஸ்காரமும் பெண்கள் பஞ்சாங்கநமஸ்காரமும்செய்ய வேண்டும் அதுவேமுறையாகும்.அதன்பின்னர்விநாயகர்முன்சென்றுவிநாயகரை மூன்று தரம் குட்டி வணங்குவதுடன், தோப்புக்கரணமும் போட வேண்டும் தோப்புக்கரணம் போடுவது என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்றாகும். வலது காதின் கீழ் மடலை இடது கையாலும் இடது காதின் கீழ் மடலை வலது கையாலும் அழுத்தி பிடித்துக் கொண்டு மூன்று தரம் இருந்து எழும்புதலே தோப்புக்கரணம் போடுதலாகும் . தோப்புக்கரணம் போடும்

பொழுது, இடது கை உள்ளேயும் வலது கை வெளியேயும் இருக்க வேண்டும் அதன் பின்னர் கருவறையில் உள்ள இறைவனை வணங்கி அவரை வலம் வரும் பொழுது அங்கே உள்ள இறைவன் இறைவிகளை வணங்கி இறுதியாக சண்டேஸ்வரரை வணங்கி விட்டுத் தரிசன பலனை தருமாறு பிரார்த்தித்து மீண்டும்முன் மண்டபத்திற்கு வந்து

அமைதியான இடத்தில் அமர்ந்து இறைவனைத் தியானிக்க வேண்டும். இதுவேஆலய வழிபாட்டில் எல்லோரும் கடைப்பிடிக்கும் ஒரு ஒழுங்கு முறையாகும். இவ்வாறனஒழுங்கு முறையில் ஒவ்வொரு நிகழ்விலும் எமது உடலுக்குத் தேவையான

உடற்பயிற்சி நடைபெறுகின்றது என்பது பலருக்கும் தெரியாத ஒரு உண்மையாகும். உதாரணமாக நாங்கள் குளித்து சுத்தமாக வரும் பொழுதுமனமும் உடலும்உற்சாகமாகத் தொடரும் உடற்பயிற்சிக்காக தயாராகுகின்றது அதன் பின்னர் கோபுர வாசலைக் கும்பிடும் பொழுது ஏற்படும் உடற்பயிற்சி, பெண்கள் ஆண்களுக்கான பஞ்சாங்க அட்டாங்க நமஸ்காரத்தில் ஏற்படும் உடற்பயிற்சி, பிள்ளையாரைகுட்டி கும்பிடும் போது ஏற்படும் உடற்பயிற்சி, பிரகாரத்தை சுற்றி வரும் பொழுது ஏற்படும் நடைப்பயிற்சி,என்பனசிறந்த உடற்பயிற்சிகளாக அமைகின்றன பிள்ளையார் சன்னதியில்போடும் தோப்புக்கரணத்தில் நம் காதுமடல்களை ஒட்டிச் செல்லும் நரம்புகளை நாம் பிடித்து இழுப்பதால் நமது ஞாபகசக்தி அதிகரிப்பதாக இன்றைய அறிவியல் உலகம் ஒப்புக்கொண்டிருக்கிறது.

இவ்வாறு வழிபாட்டு முறைகளில் உடலுக்கு ஆரோக்கியம் தரும் பல உடற்பயிற்சி முறைகளையும் இன்றைய அறிவியல் உலகம் ஒப்புக்கொண்டநமதுஞாபகசக்தியைக்கூட்டும்முறைகளையும்எமதுமுன் னோர்கள் இவ்வழிபாட்டின் ஊடாக வைத்துள்ளார்கள்இதை நாம் எம்மை அறியாமலேயே கடைப்பிடிக்கின்றோம்.ஆலயத்தில் நாம் எப்படிவழிபட வேண்டும்அதனால் ஏற்படும் நன்மையான உடற்பயிற்சிகளையும் பார் த்தோம் ஒரு ஆலயத் தி னுள்நடைபெறும் நிகழ்வுகள்யாவும்சைவஆகமவிதிப்படியேநடைபெறவேண்டும்அதன்படி கோவிலில் உள்ளே செய்யவேண்டியவை செய்யக்கூடாதவை எவை என்று எமது முன்னோர்கள் வகுத்துவைத்துள்ளார்கள் அவற்றில் சிலவற்றைப்பார்ப்போம்

1.கடவுளை வணங்கும் பொழுது இரு கரங்களையும் கூப்பி தலை குனிந்து வழங்க வேண்டும் அல்லது சிரசின் மேல் இருகைகளை வைத்து வணங்க வேண்டும்

2.கொடிமரத்துக்கு கீழேஅதாவது சிறிதும் முன்னே பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் ஆண்கள் அட்டாங்க நமஸ்காரம் செய்ய வேண்டும்

3.கோவிலில்கடவுளைத்தவிரவேறுஎவரையும்வணங்குதல்கூடாது

4 கோயிலில் வீண் வார்த்தைகளும், தகாத சொற்கள் பேசுதலும் கூடாது

5. காலணியுடன்கோவிலுக்குள் செல்லுதல் கூடாது

6.புனித இடமான கோயிலுக்குள் இருக்கும்போது, வெற்றிலை பாக்கு போடுதல், பொடிபோடுதல், சிகரெட் பிடித்தல் கூடாது.

7.தலையில் தொப்பி, முண்டாசு அணிந்துகொண்டோ, ஈரத் துணி, அரைகுறை ஆடைகளுடன் கோயிலுக்குள் செல்லக்கூடாது. தோளில் துண்டுடன் தரிசனம் செய்யக் கூடாது.நான் இங்கு கூறியது மிகக் குறைந்த அளவே . ஆலய வழிபாட்டின் போது நாங்கள் எல்லாவற்றையும் கடைப்பிடிக்க வேண்டும் அவ்வாறு கடைப்பிடிப்பதுஒன்றும் சிரமமான காரியம் அல்ல மிகவும் இலகுவான தே இலகுவான செயல்களையே எமது முன்னோர்கள் எமக்குத் தந்துள்ளார்கள்நாம் ஆலயம் சென்று வழிபட்டால் மட்டும் காணாது எம்மால் முடிந்த அளவுக்கு கோயில் திருப்பணிகளுக்கு உதவ வேண்டும்அதைவிட கோயிலில் நடைபெறும்சுத்தம் செய்தல் போன்ற சரியைத் தொண்டுகளிலும ஈடுபடுதல் மிகவும் நல்லதுஇவ்வாறாக ஆலய வழிபாட்டில்நாம்ஈடுபட்டு இருக்கும் அதே நேரத்தில்கோயிலுக்கு வெளியே நடைபெறும்சரி யைத் தொண் டுகளில் ஈடுபடும் போது எமக்கு மன நிம்மதியும் சந்தோஷமும் உணடாகும்

ராஜி
அவுஸ்திரேலியா

## கற்பூரம் நாறுமோ...... கமலப் பூ நாறுமோ....

சைவத் தமிழர்களின் பக்தியியல் வாழ்வுடன் ஒன்றித்திருப்பது கற்பூரம்.ஆலய பூசைகளின் போதும்,சகலவித பண்டிகைகளின் போதும் கர்பூரம் ஏற்றித் தொழுவது அவர்கள் வழமை.



கற்பூரம் நறுமணம் வீசும் வெண்மையான படிகம் போன்றது.அது இலகுவில் ஒளி ஊடுருவக்கூடிய இயல்பது.

ஜப்பான் நாட்டவரும் இதனைத் தெய்வீகம் நிறைந்ததாகக் கருதி மதிப்பளிப்பர்.

இந்தக் கற்பூரம், கற்பூர மரத்திலிருந்தும் பெறப்படு கின்றது.செயற்கையாகவும் சில வேதிக இரசாயனங்களைக் கலந்தும் உருவாக்கப் படுகின்றது.கற்பூர மரத்தில் இருந்து பெறப்படுபவையே சிறந்தவை. மனிதர்க்கு சுவாசத்துக்கு உகந்தவை.

கற்பூரம் சிறப்பாக ஊசியிலை மரங்களில், குறிப்பாக அங்குள்ள மருத்துவக் குணமுள்ள மரங்களின் சத்துப் பொருட்களில் இருந்து தயாரிக்கப்படுகின்றது.

குறிப்பாக 'கேப்பூர்' (CINNAMOMUM CAMPHORA) எனும் மரத்தின் உட்பொருள் மூலமும் மற்றும் 'ட்ரையோபலநோப்ஸ் அரோமேட்டிகா' (DRYOBALANOPS AROMATICA) எனும் மரத்தின் கட்டையில் இருந்தும் உருவாக்கப் படுகின்றது.(இவற்றை 'கற்பூர மரம்' என விசேடித்தும் அழைப்பர்)

இம்மரங்கள் பொதுவாக ஆசிய நாடுகளில் குறிப்பாக மலேசியா,தைவான்,மற்றும் இந்தோனேசிய ஆகிய நாடுகளில் காணப்படுகின்றன.

இந்த மரங்களில் இயற்கையாகவே படிந்துள்ள எண்ணெயில் கலந்துள்ள 'பைனேனேவில்'இருந்து கற்பூரம் தயாராகின்றது.

இவ்வகைக் கற்பூரங்கள் மிகத் தூய்மையானவையாகவும் அதிக வாசனை கொண்டவையாகவும் சிறப்புற்று வரவேற்பைப் பெற்றுக் கொள்கின்றன.

இதனை 'பைனே கற்பூரம்' (PINNE CAMPHOR) என்று விசேடித்து அழைப்பர்.பூசை போன்ற ஆன்மீக நிகழ்ச்சிகளுக்கும் சில மருத்துவ சிறப்புத் தேவைகளுக்கும் இது பயனாகின்றது.

மேற் கூறியது இயற்கையான முறையில் தயாராகும் கற்பூர வகையது.

வேதிக இரசாயனங்களைக் கலந்து தயாரிக்கப்படும் கற்பூரம், இன்னொரு வகையது.அதனைச் செயற்கைக் கற்பூரம் என்பர்.

இந்தச் செயற்கை முறைக் கற்பூரம், சிலவகை மருந்துகளின் உற்பத்திக்கும் மற்றும் சில தொழிற்றுறை தேவைகளுக்கும் பயன்படுகின்றது.

வேதிக இரசாயனக் கலவைகளின் உப பொருளான 'டேர்பைன்டென்' (TURPENTINE)இல்இருந்து வடிகட்டி உலர வைத்து இது தயாராகின்றது.

இவற்றின்அடிப்படையில்கற்பூரத்தில் இரண்டுவகைஉள்ளமைபுலனாகின்றது.

1.பச்சை கற்பூரம் (மரப் பட்டைகள் மூலம் பெறப்படுபவை.)

2.வேதி கற்பூரம் (வேதிக இரசாயனக் கலவைமூலம் பெறப்படுபவை )

### பச்சைக் கற்பூரம்

மனித வாழ்வியலுடன் பெரிதும் இணைந்தது பச்சைக் கர்பூரமாகும் இது சித்த மருத்துவத் துறையிலும் சிறப்புப் பெற்றுள்ளது. ஆத்மீகப் பயன்பாட்டுக்கு மேலாக உணவில் பூஞ்சை (FUNGUS) பிடிப்பதைத் தவிர்ப்பதற்கு குளிர் சாதனப் பெட்டி பாவனைக்கு வராத காலத்தில் பெரிதும்பயன்பாட்டினைக்கொண்டிருந்தது. இன்றும்சிலதேவைகளில் இந் நோக்கிற்காக பயன்படுத்தப் படுகின்றது.கோவில் தீர்த்தங்களில் ,மற்றும் யாக கும்பங்களில் இதனைக் கலந்து கொள்ளுவர்.



பச்சைக் கற்பூரத்தை நுகர்ந்தால் மன அழுத்தம்.மனச் சோர்வு நீங்கும், மூக்கடைப்பு, ஒற்றைத் தலைவலி குணமாகும்,சுவாசம் சீரடையும்.அதனைப் பாதத்தில் தடாவின் பித்தவெடிப்பு அகலும்.

முகக் கருமை நீங்க இதனை சந்தனத்துடன் சேர்த்து பூசிக்கொள்வர்.கிராம்புடன்சேர்த்துப்பூசினால்பல்வலிகட்டுப்படும்.குழவிக் கடிக்கு கற்பூர எண்ணெய் சிறந்த ஔடதம்.சந்தனம் மற்றும் துளசியுடன் சேர்த்துப் பூசினால் தலைவலி குணமாகும். ஒற்றைத் தலைவலிக்கு எலுமிச்சை சாற்றுடன் பச்சைக் கற்பூரத்தை சேர்த்துப் பூசின் பூரண குணமடையலாம்.

மேலும் தசைப் பிடிப்பு,மூட்டு வலி மறைய கற்பூர எண்ணெய் பயன்படுகின்றது. தேங்காய் எண்ணெய்யுடன் கற்பூர எண்ணெய்யைக் கலந்து தடவி வரின் தலை முடி கருமை பெறும்.பேன், பொடுகு நீங்கத் துளசிச் சாற்றுடன் இதனைக் கலந்து தடவிக் கொள்ளலாம்.

மேற்கூறியவை ஆத்மீக தேவைக்கு மேலதிகமாக பச்சைக் கற்பூரத்தின் மருத்துவ பயன்பாட்டினைத் தெளிவாக்குகின்றன.

கற்பூர வாசனை தெய்வீக உணர்வை மனிதர்களுக்குத் தந்து ஆட்கொள்கின்றது. கற்பூரம் எரிந்து உருகி முழுமை அடைவதுபோன்று நாமும் இறைவனிடத்து பணிந்து உருகி பக்த்தியில் கரைந்து அவருடன் கலந்து முழுமையடைய வேண்டும் எனும் தத்துவத்தை உணர்த்தவே சைவ சமய பூசை ஒழுங்குகளில் கற்பூர தீபங்கள் ஏற்றுவதைக் கொண்டார்கள் போலும்.

கற்பூர தீபத்தினை பிரம்மா முகூர்த்த வேளையில் (அதி காலை 4.30–600) ஏற்றித் தொழுதல் சாலச் சிறந்தது என வேதங்கள் உரைக்கின்றன.

தினமும் காலையில் இவ்வேளை துயில் எழுந்து காலைக்கடன் முடித்து ஸ்நானம் செய்து தீபம் ஏற்றி பாடங்களைப் கற்பதால் பயன் உண்டு.கற்பூரத்தில்எரியும்சக்தி வேகமானதால்மாணவர்கள்,சிறுவர்கள் இங்கு கூடிய கவனம் கொள்ளல் வேண்டும்.

இந்த வேகமாகப் பற்றும் இயல்பு காரணமாகவே, கூறுவதை அல்லது கற்பிப்பதை வேகமாக விளங்கிக் கொள்பவரை கற்பூர புத்தியவர் என்று கூறி வைத்துள்ளார்கள்.

கற்பூரம் நாறுமோ, கமலப்பூ நாறுமோ,
திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித்திருக்குமோ,
மருப் பொசிந்த மாதவன்றன் வைச் சுவையும் நாற்றமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன். சொல்லாழி வெண்சங்கே.
ஆண்டாள் நாச்சியார் திருமொழி.

கைலேஷ்
அவுஸ்திரேலியா


முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557


JDr
JDR CARE HOME & MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான பூரண வசதிகளுடனான பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane, Jaffna


புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
KNOWLEDGE IS POWER
January 25 FREE
February 5
தரம் 6 தொடக்கம் தரம் 11 வரை
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT


Study MBBS in China
SLMC APPROVED
Dalian Medical University
YOUR PATH TO WORLD CLASS MBBS
JDR HEALTH CARE PVT(LTD)
SEPTEMBER 2025
ADMISSION OPEN
CONTACT US FOR ADMISSION
0701348384

# ஜனாதிபதி ஹஜ் வாழ்த்து

ஹஜ் யாத்திரை அர்ப்பணிப்பு மற்றும் தியாக வாழ்க்கை தொடர்பான உதாரணங்களை சித்தரிப்பதுடன் சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் உருவாக்குவது அதன் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். ஒரு நாடாக நம் முன்னால் உள்ள சவால்களை முறியடித்து நாம் விரும்பும் முன்னேற்றகரமான நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு அனைவரின் கூட்டு முயற்சி முக்கியமானது. ஹஜ் கொண்டாட்டம் அந்த பொதுவான நோக்கத்திற்காக கைகோர்க்க ஒரு சிறந்த தளத்தை உருவாக்குகிறது. உலக மக்கள் அனைவரின் இதயங்களிலும் சமத்துவம் சகோதரத்துவம் மற்றும் தியாக உணர்வுகளை உருவாக்கும் ஹஜ் கொண்டாட்டம் உலக அமைதிக்கான ஒரு சிறந்த செய்தியாகும் என ஜனாதிபதி அநுரகுமாரதிசாநாயக்க விடுத்துள்ள ஹஜ் பெருநாள் வாழ்த்துச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வாழ்த்துச்செய்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

உலகெங்கிலும் உள்ள முஸ்லிம்கள் மிகுந்த பக்தியுடன் இன்று (07) ஹஜ் பெருநாளை கொண்டாடுகின்றனர். இஸ்லாமியர்களின் நம்பிக்கையின்படி அல்லாஹ் மீதான இப்ராஹிம் நபியின் பக்தியையும் ஒப்பற்ற தியாகத்தையும் குறிக்கும் ஹஜ் பெருநாள் இஸ்லாத்தின் ஐந்து பெரும் கடமைகளில் ஐந்தாவது கடமையாகக் கருதப்படும் மக்கா யாத்திரையின் காரணமாக தனித்துவமானதாக அமைகின்றது.

மதம் மானிட சமூகத்தை மனித நேயத்துடன் பூரணப்படுத்தவும் நல்ல சமுதாயத்தை உருவாக்கவும் எதிர்பார்க்கிறது. உலகம் முழுவதிலுமிருந்து வருகை தருகின்ற அனைத்து முஸ்லிம்களும் ஒற்றுமையுடன் இறைவனை வணங்குவதற்காக மக்காவிற்கு வரும் இந்த ஹஜ் யாத்திரை ஏனைய அனைத்து மதங்களுடனும் சமத்துவமாக வாழும் போதனையை உள்ளடக்கியது என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

மேலும் இந்த ஹஜ் யாத்திரை அர்ப்பணிப்பு மற்றும் தியாக வாழ்க்கை தொடர்பான உதாரணங்களைசித்திரிப்பதுடன் ஹஜ் கொண்டாட்டத்தின் முக்கிய நோக்கமாகவும் இது இருக்கின்றது.உண்டு - இல்லை என்ற இடைவெளி மற்றும் வேறுபாடுகளைக் கடந்து சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் உருவாக்குவது ஹஜ்ஜின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும்.

ஒரு நாடாக நம் முன்னால் உள்ள சவால்களை முறியடித்து நாம் விரும்பும் முன்னேற்றகரமான மற்றும் நாகரிகமான நாட்டைக்கட்டியெழுப்புவதற்குத் தேவையான சமூக பொருளாதார மற்றும் அரசியல் மாற்றத்தை மேற்கொள்வதில் அனைவரின் கூட்டு முயற்சி தலையீடு மற்றும் பங்கேற்பு மிகவும் முக்கியமானது.ஹஜ் கொண்டாட்டம் அந்த பொதுவான நோக்கத்திற்காக கைகோர்க்க ஒரு சிறந்த தளத்தை உருவாக்குகிறது என்பதையும் நான் இங்கு நினைவுகூர்கிறேன்.



உலக மக்கள் அனைவரின் இதயங்களிலும் சமத்துவம் சகோதரத்துவம் மற்றும் தியாக உணர்வுகளை உருவாக்கும் ஹஜ் கொண்டாட்டம் உலக அமைதிக்கான ஒரு சிறந்த செய்தியாகும்.

ஒருவரையொருவர் சந்தேகத்துடனும் வெறுப்புடனும் பார்க்கும் சமூகத்திற்குப் பதிலாக அனைவரும் சகோதரத்துவத்துடனும் அன்புடனும் வாழும் முன்னேற்றகரமான மற்றும் நாகரிகமான நாட்டைக் கட்டியெழுப்ப நமது ஆளும்தரப்பு எடுக்கும் முயற்சியில் தமது புனிதமான நம்பிக்கையுடன் அனைத்து இஸ்லாமியர்களும் ஒன்றாகக் கொண்டாடும் ஹஜ்ஜுப் பெருநாள் நமது பயணத்திற்குப் பெரும் ஆசிர்வாதம் ஆகும்.

இந்நாட்டிலும் உலகெங்கிலும் உள்ள அனைத்து இஸ்லாமியர்களுக்கும் ஈதுல் அல்ஹா ஹஜ்ஜுப் பெருநாள் நல்வாழ்த்துக்கள்.

உங்கள் கனவை நனவாக்க ...!
NVQ Level 3 & 4 Courses
புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025
கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு
•CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
•NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)
கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன் 3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்
தகுதி:
•வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
•ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
•GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY
46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722

# 323 கொள்கலன் விடுவிப்பு தொடர்பான விசாரணையில் உண்மை வெளிவரும்

## அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவிப்பு

323 கொள்கலன் விடுவிப்பு தற்போதைய பிரதான பேசுபொருளாக உள்ளது. சுங்கத்தில் இருந்து கொள்கலன்களை விடுவிக்குமாறு ஆளும்தரப்பு ஒருபோதும் அழுத்தம் பிரயோகிக்கவில்லை. எம்மையும் தொடர்புப்படுத்தி குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார்கள். குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் விசாரணைகளின் பின்னர் உண்மை வெளிவருமென போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற அமர்வின் போது வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையின் போது ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

கொழும்பு துறைமுகம், காலி துறைமுகம், அம்பாந்தோட்டை துறைமுகம், திருகோணமலை துறைமுகம், ஒலுவில் துறைமுகம், காங்கேசன்துறை துறைமுகம், பருத்தித்துறை துறைமுகம், மன்னார் இறங்குதுறை, புத்தளம் துறைமுகம் ஆகியன இலங்கையில் உள்ள பிரதான துறைமுகங்களாக காணப்படுகின்றன.

கொழும்பு துறைமுகம் 2024 ஆம் ஆண்டு 99 பில்லியன் ரூபாய் வருமானத்தை பெற்றுக்கொண்டுள்ளதுடன், 56 பில்லியன் ரூபாய் செலவு பதிவாகியுள்ளது. அதேபோல் திருகோணமலைத் துறைமுகம் கடந்த ஆண்டு 2.8பில்லியன் ரூபா வருமானத்தை பெற்றுக்கொண்டுள்ளதுடன், 1.5 பில்லியன் ரூபா செலவு பதிவாகியுள்ளது.அதேபோல் காலி துறைமுகம் கடந்த ஆண்டு 907 மில்லியன் ரூபா வருமானத்தை பெற்றுக்கொண்டுள்ளதுடன், 958 மில்லியன் ரூபா செலவு பதிவாகியுள்ளது.

2032ஆம் ஆண்டு காலப்பகுதியில் கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனையம் அபிவிருத்தி செய்யப்படும். தெற்கு முனையத்தின் பணிகள் இந்த ஆண்டு 50 சதவீதமளவில் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திருகோணமலைதுறைமுகம் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளை ஒருமித்த வகையில் அபிவிருத்தி செய்வற்கு தொடக்ககட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. சகல துறைமுகங்களும் முறையானதிட்டமிடலுக்கு அமைய அபிவிருத்தி செய்யப்படும்.

துறைமுகங்கள் மற்றும் சுங்கத்தில் கடந்த காலங்களில் இடம்பெற்ற மோசடிகள் குறித்து உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும். சுங்கத்தில் இருந்து கொள்கலன்களை விடுவிப்பதற்கு எமது ஆளும்தரப்பில் எவரும் சுங்கத்துக்கு அழுத்தம் பிரயோகிக்கவில்லை.

323 கொள்கலன்கள் விடுவிப்பு தற்போதைய பிரதான பேசுபொருளா க காணப்படுகின்றது. இந்த விவகாரத்தில் என் மீதும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. குற்றப்புலனாய்வு திணைக்களம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளது. விசாரணைகளின் பின்னர் உண்மை வெளிவரும் என்றார்.

# இலங்கை விமானம் அவசரமாக இந்தோனேசியாவில் தரையிறக்கம்

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து சிங்கப்பூருக்கு புறப்பட்ட இலங்கை விமான சேவைக்கு சொந்தமான விமானமொன்று தொழிநுட்ப கோளாறு காரணமாக இந்தோனேசியாவில் அவசரமாக தரையிறக்கப்பட்டுள்ளது.

சிங்கப்பூருக்கு நேற்றுப் புறப்பட்ட யு.எல். 306 என்ற விமானமே இவ்வாறு தரையிறக்கப்பட்டுள்ளது.

இந்தோனேசியாவின் மேடானில் உள்ள கோலா நமு சர்வதேச விமான நிலையத்தில் இவ்விமானம் அவசரமாக தரையிறக்கப்பட்டுள்ளது.

பிளைட் அவெயாரின் விமான கண் காணிப்பு தரவுகளின்படி, விமானம் இடைந டுவில் திசைதிருப்பப்பட்டு மேடானில் தரையிறங்கியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தோனேசிய தொழில்நுட்பக் குழு விமானத்தை ஆய்வு செய்து, பழுதுபார்ப்புக்கு அதிக நேரம் தேவைப்படும் என்று இலங்கை விமான சேவைக்கு தெரிவித்துள்ளது. அதற்கமைய உடனடியாகவே இலங்கையிலிருந்து தொழிநுட்ப குழு மேடானை சென்றடைந்துள்ளது.

மேலும் குறித்த விமானத்தில் பயணித்த பயணிகளை சிங்கப்பூருக்கு கொண்டு சேர்ப்பதற்காக நேற்று இலங்கை நேரப்படி பிற்பகல் 1.45க்கு இலங்கை விமான சேவையின் பிரிதொருவிமானம் அனுப்பிவைக்கப்பட்டது.

தரையிறக்கப்பட்ட விமானத்தில் பயணித்த பயணிகள் நீண்ட காத்திருப்பு காலம், வரையறுக்கப்பட்ட வசதிகள் மற்றும் விமான நிலையத்தில் தெளிவான தகவல் தொடர்பு இல்லாதது குறித்து புகாரளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.06.2025இல் வெளியிடப்பெற்றது